# நிசப்தம்

'ஓம் நாராயணாய வித்மஹே: வாஸுதேவாய தீமஹி;
தன்னோ விஷ்ணுப்: ப்ரசோதயாத்'



சீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம்,
தாழங்குடா,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அன்பே சிவம்

அதுவே நலம்

சித்தாந்த வித்தகர், செஞ்சொற்கொண்டல், ஆச்சாரியதீபம்

செந்தமிழ்வாரிதி, அருட்கவியரசு, விஸ்வப்பிரம்ம ஸ்ரீ

**வை.இ.எஸ்.கரந்தன் குருக்கள்**

(கண்மணிதாசன் ஏரூரான்)

அவர்கள் உவந்தளித்த நல்வாழ்த்து

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலார் வாக்கும்

"அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்

இன்பநிலைதானே வந்தெய்யும் பராபரமே" எனும் தாயுமானவர் வாக்கும், கடமையை செய் பலனை எதிர்பாராதே எனும் கீதையின் போதனையும் ஆன்றோர் காட்டிய நன்னெறிகள்.

தமிழர் தம் பெருமையில் படர வழியின்றி வெறும் தரையிலே குறும்பயிராக பசும் செடியாகக் கிடந்த முல்லைக் கொடிக்கு தன்னுடைய பொற்தேரையே ஈந்தளித்தான் பாரி மன்னன். கடும் குளிரால் நடுங்கிய அழகிய மயிலுக்கு தன்மேனியில் போர்த்திய விலையுயர்ந்த போர்வையை ஈந்தளித்தான் பேகன் எனும் மன்னன். இவையெல்லாம் தமிழர் தம் வாழ்வுக்கு சான்றுகளாய் அமைகின்றன.

ஈழத்திருநாடு ஒரு தெய்வீக பூமி உலகங்களுக்குள் ஒளிபொருந்திய முத்தாக இலங்கியவள் இலங்கை அன்னை. இத்தகைய பெருமை பொருந்திய இந்நாடு வன்மம் எனும் மனப்போக்கினால் வன்செயல் தலைதூக்கி துன்பமே தொடர்கதைகளாகிய கிழக்கிலங்கையில் பாரிய வறுமையின் தாக்கம் ஒவ்வோர் குடும்பத்தையும் உரிமையாக்கியது. துயர அலைகளுக்குள் சிக்கிய மக்களுக்கு தொண்டாற்ற நிறுவனங்கள் வந்தன. வெளிநாட்டவர்கள் இங்கு வந்து மக்கள் சேவையை மனதார நினைந்து செய்தனர். வெளிநாட்டவர்களுடைய சேவை தொடர்ந்து இருக்குமா? இக்கேள்விக்கு மாற்றுவழி நாம் நமது மண்ணில் நம் மக்களுக்கு நம்மை அர்ப்பணம் செய்து இயன்ற தொண்டை இன்முகத்தோடு செய்தல் வேண்டும்என்ற நோக்கில் "சரீரம்"எனும் பெயரோடு தனித்துவமாகத் தன்னில் கொடுக்கும் கனிமரம் தனிமரமாக நிமிர்ந்து நின்றது.

மரத்தின் வேர் சேற்றுக்குள் இருந்தாலும் அந்த மரம் கொடுக்கும் நிழலையும் பூவையும், கனியையும், மக்கள் பயன் பெறுகின்றார்கள். அதனால் அந்த மரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர் சேற்றுக்குள் இருந்து சிரிக்கிறது என்று யாரும் சிந்திக்கமாட்டார்கள். ஒரு தனி ஸ்தாபனத்தை வழிநடத்துகின்றவர்கள் படும் கஷ்டத்தை அதை அந்த ஸ்தாபனத்தின் பயனை அனுபவிக்கின்றவர்கள் உணர்வது அரிதே. இதை எனது மனக் கண்ணோட்டத்தில் உணர்ந்து கொண்ட நான் எனக்குள் சிந்தித்தேன். சரீரம் ஒரு தனி விருட்சம். இதன் கிளைகள் வியாபித்து பரந்துள்ளது. ஆல்போல் தழைத்து.... என்ற முதுமொழிக் கொப்ப அடிமரத்தை மறைக்கும் விழுதுகளின் விழுமியங்களின் செழுமைகளை கண்ணால் கண்டேன். அன்பு சகோதரர் லோகேஸ்பரன் முயற்சி, பெறுகளுக்கெல்லாம் பெரும் பேறு. அவரோடு இணைந்து தொண்டு செய்யும் தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே. அச்சரீரம் எனும் நிறுவனத்துள் இனமத பேதமின்றி உடலால் மனிதன் ஒன்றுபட்டது போல் சரீரம் எனும் உணர்வுக்குள் ஒன்றுபட்டு நின்று பணிபுரிகின்றனர். அந்தப் புனிதமான சேவை நிலையத்தில் தெய்வச் சிலையாகச் சிரிக்கும் கார்மேக வண்ணனாக காட்சி தருகின்றான் கண்ணபரமாத்மா. அவனருள் அங்குண்டு. அக்கண்ணனை பிரதிஷ்டை பண்ணி வைத்த பாக்கியம் அடியேனுக்கு உண்டு. அவ்வருளின் மகிமையால் குடமுழுக்குக் கண்டு ஓராண்டு பூர்த்தி நன்னாளில் ஆண்டு மலராம் எம்அன்பில் ஆண்ட மலராம் "நிசப்தம்" எனும் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் என்மனம் இன்பத்துள் ஆழ்ந்து இனிமையில் குழைகிறது.

அன்புற்ற நெஞ்சங்கள் அனைவரும் வாழ்க!
ஆதரவுக்காதரவாய் நிற்கும் சரீரம் வாழ்க!
பண்புள்ள தாழைநகர் பல்லாண்டு வாழ்க!
பணிசெய்யும் தொண்டர்கள் நீடுழிவாழ்க!
இன்புற்ற இனியார்கள் எந்நாளும் வாழ்க!
இதயத்தால் ஒன்றுபட்டு உயர்வோளடு வாழ்க!
எந்நாளும் கண்ணனருள் இனிதோங்கி வாழ்க!
என்இதய வாழ்த்தாக பலகோடி வாழ்க!

இவ்வண்ணம்

என்றும் அன்புள்ள

**விஸ்வப் பிரம்மஸ்ரீ வை.இ.எஸ். காந்தன் குருக்கள்**

*பிரதம குரு ஸ்ரீ முத்துலிங்க விநாயகர் தேவஸ்தானம் - பெரிய போரதீவு.*

*ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் தேவஸ்தானம் - முனைத்தீவு.*

*ஸ்ரீ காளிபுரம் பெரியபோரதீவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

சரீரம் அலுவலக காணியினுள் அமைந்துள்ள மகாவிஷ்ணு கோயில் கும்பாபிஷேக முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் "நிசப்தம்" எனும் இலவச வெளியீட்டிற்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சரீரம் அமைப்பு மக்கள் சேவையை முதன்மைப்படுத்தும் ஒரு அரச சார்பற்ற நிறுவனமாக இருந்தும் 'கடவுள்' சேவை பற்றியும் சிந்திப்பது "மக்கள் சேவை மகேசன் சேவை" என்ற கூற்றினை மெய்ப்பிப்பதாயுள்ளது.

உலகில் அனைத்து மக்களும் மதங்களின் வழிகாட்டுதலிலேயே தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளதைக் காணலாம். பல்வேறு மதங்களையும் பின்பற்றும் மக்கள் அடிப்படையில் மனிதர்கள் என்கிற உணர்வோடு மனிதாபிமான செயல்பாடுகளை விரிவு படுத்துகின்ற போது உலக சமாதானம் எய்தப்படுவது நிச்சயமானது.

கிழக்கில் வாழுகின்ற சகல மதங்களையும் சார்ந்த மக்களுக்கும் வேறுபாடுகளின்றி சேவையாற்றி வருகின்ற 'சரீரம்' அதன் கொள்கை வழியில் வெற்றி பெறவும், 'நிசப்தம்' வெளியீடு மக்களுக்கு உச்ச பயனைத் தரவும் வாழ்த்துகிறேன்.

**M.H.M.அஷ்ரப் P.C., L.L.M., M.P.**

*துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர்.*
*த)லைவர், ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

மட்டக்களப்பு மண்ணிலே பிறந்து, மண்வாசனையுடன் மிகவும் விரைவாக வளர்ந்து, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மக்களின் எழுச்சிக்கும் உயர்ச்சிக்குமாகப் பெரும் பணியாற்றி வருகின்ற சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம் பாராட்டுக்குரியதாகும்.

பல ஆயிரக்கணக்கான வருமானம் குறைந்த குடும்பங்களைத் தம்முடன் இணைத்துச் "சரீரம் குடும்பங்களாக " ஆக்கிக் கொண்ட இந்த நிறுவனம், போசாக்குத் திட்டத்தின் மூலம் நூற்றுக்கும் அதிகமான கிராமங்களில் பெறுமதி வாய்ந்த போதனைகளையும், செயல் முறைப் பயிற்சிகளையும் வழங்கியுள்ளதும் பாராட்டப்பட வேண்டியதேயாம்.

மக்களுக்கு எதையாவது இலவசமாக வழங்குவது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர்களுக்கு செய்யும் உதவியாக அமையாது. அவர்களைச் சோம்பேறிகளாக்குவதாகவே அமையும். இந்தக் கொள்கையைப் பின்பற்றி, "உழைத்து வாழ்" என்ற நோக்கோடு, வறிய மக்கள் என இனங்காணப்பட்டவர்களுக்குச் சுயதொழில்களில் பயிற்சிகளைக் கொடுத்து, அத் தொழில்களைச் செய்யக் கடன் உதவிகளையும் வழங்க இந்நிறுவனம் முன்வந்துள்ளதும் வரவேற்கத் தக்கதாம்.

இந்தப் பிராந்தியத்திலே வாழுகின்ற தமிழ் - முஸ்லீம் மக்களிடையே நிரந்தரமான ஒற்றுமை நிலவுவதற்கும் இவர்கள் செய்கை மூலம் நடவடிக்கை எடுத்துச் சாதனை படைத்துள்ளார்கள்.

இத்தகைய நல்ல இலட்சியங்களுடன் பணியாற்றும் இவர்கள், சாந்தியையும், சமாதானத்தையும் ,"போது மென்ற மனதையும் " உருவாக்கும் நல்லெண்ணத்துடன் தங்கள் தலைமை அலுவலகத்தில் கோயிலொன்றை அமைத்து முறைப்படி சமய வழிபாடாற்ற உதவுவது மனதுக்கு மகிழ்ச்சி தருகின்றது. பார்த்தனுக்கு சாரதியான கண்ணனுக்குக் கட்டப்பட்டுள்ள இந்தக் கோயிலுக்கு "நிசப்தம்" என நாமமிட்டுள்ளது மிகவும் பொருத்தமானது. ஏழாண்டுப் பணிகளை நிறைவேற்றி எட்டாம் ஆண்டில் காலடி வைக்கும் இவர்கள், கோயிலில் சங்காபிஷேகமொன்றையும் , "நிசப்தம்" இலவச கைநூலினையும் இரண்டாம் தடவையாகவும் வெளியிடுவதும் நல்ல செயல்களாம்.

இந்த நிறுவனமும் அதன் பயன் கருதாப் பணிகளும் வளரவும் சிறக்கவும் இறைவனைப் பிரார்த்தித்து ஆசி கூறுவதில் மனநிறைவு காணுகின்றேன்.

'சுபராஜ்'<br>
மட்டக்களப்பு<br>
05-01-98

**யோசப் பரராஜசிங்கம்** பா.உ.<br>
மட்டக்களப்பு, த.வி.கூ.<br>
பாரளுமன்றக் குழுத் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி

சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம் என்று அழைக்கப்படும் சமூக சேவைகள் நிறுவனம் கடந்த பல ஆண்டுகளாக நலிவுற்ற மக்களைக் கட்டி எழுப்பும் பணியில் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டு வருவதை நான் அறிவேன். இவர்கள் கடந்த ஆண்டு தங்கள் தலைமை அலுவலகத்தில் கோயில் ஒன்றை அமைத்து சமயப் பணியிலும் ஈடுபாடுகாட்டி வருவது மிகவும் பாராட்டத்தக்க செயலாகும்.

"மனம் போல வாழ்வு" என்று நமது முன்னோர்கள் சொன்னார்கள். மனம் "போதுமென்று" அமைந்து விட்டால் அமைதி தானாகக் குடிகொள்ளும். மன அமைதியை வலியுறுத்துவது போன்று "நிசப்தம்" என்ற பெயரையே கோயிலுக்குச் சூட்டியுள்ளதும் போற்றுதற்குரியது.

இவர்களின் செயற்பாடுகள் சிறக்கவும் இவர்களின் எண்ணங்கள் பலிக்கவும் இறையருளை நினைந்து ஆசி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**பொ. செல்வராசா, பா. உ**
*தமிழர் விடுதலைக் கூட்டணி,*
*மட்டக்களப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தென வாழ்க

ஈரம்,
மண்ணில் இருந்தால்
பயிர்கள் வாழும்;
உன்னில் இருந்தால்,
உயிர்கள் வாழும்.

அவலத்தின் மத்தியில்
மானிடம் துடிக்கையில்;
அரவணைப் புக்காய்த்
தவியாய்த் தவித்திடும்.

எழுத்தும் கருத்தும்
வயிற்றை நிறைக்குமா?
இல்லிடம் கட்டுமா?
இங்கிதம் காட்டுமா?

இல்லை... விடைதான்;
இத்துடன் முடிந்தால் ...
தொல்லை தீருமா?
துயரம் மறையுமா?

சரீரம் எடுத்த
பயன்பெற வேண்டுமேல்,
சாதனை இயற்ற
முன்வர வேண்டும்!

இவைதான் வேதம்
சரீரத்தின் நாதம்
இதன் திறம் ஓதும்
இதனை எப்போதும்.

இத்தகு சரீரம்
இயற்றுவ ததிகம்;
முத்தென வாழ்க!
முழு நில வாக!

**கி. துரைராசசிங்கம்,பா.உ**
*(அண்ணாதாசன்)*
*தமிழர் விடுதலைக் கூட்டணி,*
*மட்டக்களப்பு மாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வன்செயல்களின் காரணமாகப் பாதிக்கப்பட்டு துன்ப துயரங்களை அனுபவித்து வரும் மக்களுக்கு நேசக்கரம் நீட்டி துயர் துடைத்து வரும் அரச சார்பற்ற நிறுவனங்களில் "சரீரம்" ஸ்ரீ லங்கா தேசிய மன்றம் குறிப்பிடத்தக்கதாகும்.

'நல்வாழ்வுக்கு நல்வழி செய்வோம்' என்ற தாரக மந்திரத்துடன் இனங்களுக்கிடையே சாந்தியும் சமாதானமும் நிலைபெறச் செய்யும் இலட்சியத்துடன் கல்வி, கலாசாரம், சமூக மேம்பாடு, ஆத்மீக தேவைகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் "சரீரம்" நிறுவனம் அளப்பரிய செயல் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

"சரீரம்" தலைமையக வளாகத்தில் அமையப்பெற்ற மகா விஷ்ணு தேவஸ்தானத்தில் பிரதி வருடமும் தை மாதம் 23ம் திகதி நடைபெறும் சங்காபிஷேக பூஜைகளையொட்டி வெளியிடப்படும்' நிசப்தம்' மலருக்கு ஆசி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆத்மீக வளர்ச்சிக்காகவும் உழைத்துவரும் "சரீரம்" நிறுவனம் மேலும் சிறப்பாக செயறபட்டு மக்களது நல்வாழ்வுக்கு வழிசெய்ய வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

மக்கள் சேவையிலுள்ள

**அ. இராசமாணிக்கம். பா.உ.,**

*அமைப்பாளர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி,*

*மட்டக்களப்பு மாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி

மட்டக்களப்புத் தமிழகத்திலே இயற்கை வளம் நிறைந்த கிராமியச் சூழலிலே தலைமையகத்தைச் சொந்தமாக அமைத்துத் துயருற்ற மக்களுக்குத் தொண்டாற்றி வருகின்ற சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றமாகிய சமூக சேவைகள் நிறுவனமானது அதன் தலைமையகத்தை அண்டியதாக விஷ்ணுபகவானுக்கு ஆலயமொன்றை அமைத்து முறைப்படி ஆராதனைகள் செய்து வருவது மனமகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரிய செயலாகும்.

அமைதி ஆன்ம ஈடேற்றத்துக்கு அடித்தளமாகும். அமைதி என்ற பொருள் தொனிக்கும் 'நிசப்தம்' என்ற பெயரை ஆலயத்திற்கு சூட்டியுள்ளதும், சமயக் கோட்பாடுகளைத் துல்லியமாக விளக்கும் இலவச பிரசுரத்திற்கு 'நிசப்தம்' என்ற பெயரை இட்டுள்ளதும் மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

பொருள் வளம் இவ்வுலக வாழ்வுக்கு அத்தியாவசியமானது. ஆதலால் இந்த நிறுவனம் சமூகப் பணியைச் செய்து வருவது வரவேற்கத்தக்கது. ஆத்மீக முன்னேற்றம் மறு உலக வாழ்வுக்கு இன்றியமையாதது. அதற்காக இவர்கள் சமயப் பணியைச் செய்து வருவது சிறப்பானதாகும்.

சரீரம் நிறுவனத்தின் இவ்விரு பணிகளும் வருங்காலத்தில் மேலோங்கி அப்பிரதேச மக்களுக்கு வாழ்வும் வளமும் கொடுத்திட எல்லாம் வல்ல இறை சக்தியைப் பிரார்த்தித்து இந்த ஆசிச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

**ஜி. கிருஷ்ணமூர்த்தி**
தலைமைச் செயலாளர்.
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

26-12-97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி

"பரித்ராணாய சாதூ னாம்
வினாசாய சதுஷ் குருதாம்
தர்மஸங் ஸ்தாபனார்த்தாய
ஸ்ம்பவாமி யுகே யுகே "

என்று கூறியவாறு தர்மம் நிலை குலைந்து அதர்மம் தலையெடுத்த வேளைகளில் தர்மத்தை நிலைநாட்ட அவதாரங் கொள்ளும் அற்புத நாயகனான நாராயணனுக்கு கோவில் அமைத்துக் கும்பாபிஷேகம் கண்டு வழிபாடியற்றிவரும் சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றத்தின் பிரசுரமாகிய "நிசப்தம்" நூல் வெளியீட்டிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமையடைகிறேன்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் நொந்த உள்ளங்களுக்கு இதமளிப்பதாக, இன்பமளிப்பதாக இயங்கும் "சரீரம்" நிறுவனம் அம்மக்களின் துயர்துடைக்கும் விடிவெள்ளியாக சமூகப் பணியாற்றுவதோடு நின்றுவிடாது காலத்தின் தேவையறிந்து அமைதியற்று அல்லலுறும் மக்களின் மனதை ஒருநிலைப்படுத்தி உள்ளத்தில் உறுதிப்பாட்டை ஏற்படுத்தவும் கலங்கிய விழிகளின் கண்ணீரைத் துடைத்துக் கவர்ச்சி ஊட்டவும், ஆன்மீக நெறி பரப்பும் முயற்சியில் முயன்றுள்ள முன்மாதிரியான இச்செயல் பாராட்டப்பட வேண்டியதாகும்.

அமைதி நிலைநாட்டப்படவேண்டிய அத்தியாவசியமான இவ்வேளையில் அப்பொருள் தரும் "நிசப்தம்" என்ற வெளியீட்டை அதுவும் இலவசமாக வழங்க "சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம்" முன் வந்துள்ளமையை வாழ்த்தி வரவேற்பதோடு இம்முயற்சியில் ஈடுபடும் அனைவருக்கும் எனது அன்பார்ந்த ஆசியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சுந்தரம் டிவகலாலா.**
செயலாளர்,
வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, கலாசார அலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம் என்பது மட்டக்களப்பிலே தலைமை அலுவலகத்தைக் கொண்டு செயற்படும் ஓர் அரச சார்பற்ற சமூகசேவைகள் நிறுவனமாகும். இந்த நிறுவனம் தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் ஒரு பங்காளி நிறுவனமாகவும் பதிவு செய்யப்பட்டது.

தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் போசாக்குப் பிரிவின் தலைவி என்ற வகையில் சரீரம் நிறுவனத்துடன் நெருக்கமான உத்தியோக பூர்வ உறவுகளும் தொடர்புகளும் எனக்கு ஏற்பட்டது.இந்த நிறுவனத்தின் அழைப்பின் பிரகாரம் நான் மட்டகளப்புக்கு இதுவரை மூன்று தடவைகள் விஜயம் செய்திருக்கிறேன்.

சரீரம் நிறுவனத்தின் 5வது வருடாந்த விழாவில் கலந்து கொள்வதற்காக 16.05.95 ஆம் திகதி மட்டக்களப்புக்குச் சென்ற பொழுது அங்கு தாழங்குடா என்னும் கிராமத்தில் சரீரம் தலைமை அலுவலகக் கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டும் வைபவத்திலும் கலந்து கொண்டேன்.

இதன்பின்னர் 31.08.95 ஆம்திகதி சரீரம் நிறுவனமும், மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ., கல்லாறு வை.எம்.சி.ஏ நிறுவனங்களும் இணைந்து நடாத்திய போசாக்குக் கண்காட்சியில் கலந்து கொள்வதற்காகச் சென்றேன்.

அதைத் தொடர்ந்து 25.06.97ஆம் திகதி சரீரம் நிறுவனம் மட்டக்களப்பில் நடாத்திய தொண்டர்கள் பாராட்டு வழங்களிலும், 560 தொண்டர்களுக்கும் சான்றிதழ் வழங்கும் விழாவிலும் கலந்து கொண்டேன்.

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 9 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 100 கிராம சேவகர் பிரிவுகளில் 10 போசாக்குத் திட்டங்களை மிகவும் திருப்பதிகரமாக நடாத்திய பெருமை இந்த நிறுவனத்துக்கு உண்டு. சமூக சேவையில் நிறைவான அனுபவத்தையும், வசதி குன்றந்த மக்களுக்கு எதையாவது செய்ய வேண்டுமென்ற நல்லார்வத்தையும் கொண்ட இளம் வயதினரொருவரைத் தலைவராகவும், திறமை மிகுந்த செயலணியொன்றைத் துணையாகவும் கொண்டு இயங்கும் சரீரம் நிறுவனத்தினர் தமது தலைமை அலுவலகக் காணியில் கோயில் ஒன்றை அமைத்து நடாத்துவதும், இறைவழிபாடுகளில் பங்குபற்றுவதும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

"நிசப்தம்"என்ற பெயருடன் புத்தகமொன்றை வெளியிடவிருப்பது மேலும் மகிழ்ச்சியூட்டுகிறது. இந்த நிறுவனத்தினரின் பணிகள் சிறக்க இறைவனைப் பிரார்த்தித்து நல்லாசி கூறுகின்றேன்.

**திருமதி. சுராங்கனி தயாரத்ன,**
*தலைவர்,*
*தாய் சேய் போசாக்குப் பிரிவு*
*தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்,*
*கொழும்பு - 01.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிசப்தம்

தாழங்குடாவில் அமைந்துள்ள "சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம்" தனது அலுவலகக் காணியில் கோயில் ஒன்றை அமைத்து, அதில் மாகாவிஷ்ணு மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து, அக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்து, அந்தக் கும்பாபிஷேகத்தின் ஓராண்டை நினைவு கூர்ந்து "நிசப்தம்" என்ற சிறப்பு மலர் ஒன்றை தொடர்ந்து வெளியிடுவது வரவேற்கத்தக்கது.

நான் அறிந்த வரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு தொண்டர் ஸ்தாபனம், தனது அலுவலகக் காணிக்குள் கோயில் அமைத்து, கும்பாபிஷேகம் செய்து தினசரி, பூசை நடாத்துகிறதென்றால் அது "சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம் ஒன்றாய்த் தான் இருக்க வேண்டும். மக்கள் சேவையே மகேசன் பூசை என்பது சுவாமி விவேகாநந்தரின் தாரக மந்திரம் ஆகும். சமூக சேவையையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவையையும் மேற்கொண்டுள்ள ஒரு நிறுவனம் இவ்வாறு செய்வது அதன் இறைநம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறது.

தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இறைவன் திருவருளேதுணை என்பதை எடுத்துக்காட்ட இச்செயற்பாடு மேற்கொள்ளப்படுகிறது என எண்ணுகிறேன்.

இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் அனைத்தும் தெய்வார்ப்பணமாக நடைபெறவும், அதன் பெறுபேறுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை பயக்கவும் இறைவன் திருவருள் துணை நிற்பதாக.

இவ்வண்ணம்,

**அ.கி.பத்மநாதன்**

அரசாங்க அதிபர்/

மாவட்டச் செயலாளர்

மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையும் ஆத்மீக செயற்பாடும்

எமது சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றமானது மக்கள் சேவையைக் குறிக்கோளாகக் கொண்டு 1990 ம் ஆண்டு தை மாதம் 28ம் திகதி சமூக சேவையில் நாட்டம் கொண்ட இளம் பணியாளர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. "நல்வாழ்வுக்கு நல்வழி செய்வோம்" என்பதே இந்த நிறுவனத்தின் தாரக மந்திரமாகும். பல்வேறு இனங்களையும், சமயங்களையும் சேர்ந்த மக்களை ஓர் அணியாகத் திரட்டுவதும், அவர்கள் மத்தியிலே சமாதானத்தையும், ஐக்கியத்தையும், புரிந்துணர்வையும், சாந்தியையும் நிலைபெறச் செய்வதும் எமது இலட்சியமாயிருந்தது. இந்தப் பணியை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வந்த வேளையில், மக்களின் வாழ்க்கைக்கு பொருள் வளம் எவ்வளவு முக்கியமானதோ அவ்வாறே மறு உலகவாழ்வுக்கு ஆத்மீக வாழ்வும் அத்தியாவசியமாகும் என்பதும் உணரப்பட்டது.இதன் பெறுபேறாக எமது நிறுவனம் "நிசப்தம்" என்ற பெயரோடு கூடிய வணக்கத் தலம் ஒன்றையும் தலைமையகக் காணியில் அமைத்துக் கொண்டது. காக்கும் தெய்வமாகப் போற்றப்படும் கண்ண பரமாத்மாவை இவ்வாலயத்தில் முறைப்படி பிரதிஷ்டை செய்து தினப் பூசைகளையும் நடாத்தி வருகின்றோம். எமது நிறுவனத்தின் பணியாளர்கள் மட்டுமல்லாமல் இங்கு வருகை தருகின்ற பிறரும் அயலில் வாழ்கின்று கிராம மக்களும் இறைவனைப் பிரார்த்தித்து அவரருள் பெற்று வருவது எமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

"பலனை எதிர்பார்த்து எதையும் செய்யாதே" என்பது பகவத் கீதை காட்டும் வழி. பற்றை நீக்கிப் பணிகளைச் செய்வதே மேலான நெறி.இந்த நல்ல மார்க்கத்தில் வாழ்வதற்கு முறையான பிரார்த்தனைகளும், சாதனைகளும் இன்றியமையாதவை. இவற்றை ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு உதவியாகவே ஆலயம் அமைக்கப்பட்டது.

இக்காலத்திலே மக்கள் உண்மை, நீதி என்பன பற்றி உரத்துக் குரல் எழுப்புகிறார்கள். ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது அவர்களின் குரல்கள் வெறும் போலிக் குரல்களாகவே தெரிகிறது. உண்மையைக் கடைப்பிடிக்காமலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியைமதிக்காமலும் வாழ்பவர்கள்தான் கூடுதலாக இவ்வாறு குரல் எழுப்புகிறார்கள் என்பதை அவதானிக்க முடிகிறது. ஆதலால் இந்த வேஷதாரிகள் என்றுமே துன்பங்களையும், இடர்களையுமே சந்திக்கிறார்கள். நம்பிக்கையுடனும், அன்புடனும், இரக்க சிந்தையுடனும் நமது நாளாந்தக் கடமைகளை ஆற்றி வருவோமே யானால் நாம் இயற்கைச் சக்தியின் அனுக் கிரகத்திற்கு உரித்தானவர்கள் ஆவோம். இயற்கை சக்தி என்பதே இறை சக்தியாகும். கடவுள் கோட்பாடுகளுக்கு இயைபாக வாழ்வது கடவுளை நம்பிக்கையோடு பிரார்த்திப்பதற்கு ஒப்பானதாகும். சுயநலத்தை விரும்புவர்கள் துன்பத்தை அறுவடை செய்வார்கள். பொது நல சேவையைக் குற்றமற்ற முறையில் செய்பவர்கள் ஆத்மீக இலாபத்தை அடைவர்கள். ஆதலினாலேதான் பொது நலசேவையும் ஆத்மீகப் பணியும் ஒன்றோடு ஒன்று இணைந்தது என்பதும் பிரிக்கப்பட முடியாது என்பதும் உறுதியாகின்றது.

இந்த நல்ல இலட்சியத்தை மக்கள் மனங்களில் பசுமரத்தாணி போன்று பதியவைப்பதாக மிளிர்வதுதான் இந்த ஆலயம்.

இவ்வாலய கும்பாபிஷேகத்தின் முதலாவது ஆண்டு நிறைவை நினைவுபடுத்தும் நிகழ்வாகச் சங்காபிஷேமொன்றை நடாத்தவும் அன்னதானம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இரண்டாவது " நிசப்தம்" இலவச கைநூலை வெளியிடவுள்ளோம்.இந்த வெளியீட்டுக்கு மனமுவந்து ஆசிச்செய்தியை வழங்கிய பெரியார்களுக்கும். மக்கள் சேவையே மகேசன் சேவை என்று எம்முடன் பணியாற்றி வருகின்ற பணியாளர்களுக்கும், நிறுவனத்தின் தலைவர் என்ற பெயரில் எனது சார்பாகவும் நிறுவனத்தின சார்பாகவும் மனமார்ந்த நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்ளவும் அவர்களின் சேமத்திற்கும் உயர்வுக்குமாக கிருஷ்ண பரமாத்மாவைப் பிரர்ர்த்திக்கவும் விரும்புகின்றேன்.

கிருஷ்ணார்ப்பணம்

அன்புடன்,

**ஆறுமுகம் லோகேஸ்பரன்** - ச.நீ.

தலைவர்,

"சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம்"

1998.01.24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிசப்தம்

நிசப்தம் என்றால் அமைதி, மௌனம், அடக்கம், சப்தமின்மை என்றெல்லாம் பொருள்படும். அமைதி ஆழத்தைக் குறிக்கும்; மௌனம் கலக நீக்கமாகும்; அடக்கம் அறிவுடைமையாம். மௌனத்தின் ஊடாக அமைதி பேணப்பட்டால் மன அடக்கம் உண்டாகும். அதன் வாயிலாக அறிவின் அறிவாகிய ஞானம் கைவரப் பெறலாம். பிரார்த்தனை, தியானம் என்பவற்றைச் சாதனை செய்தால் இவ்வுயர் நிலைக்கு உரித்தாக முடியும்.

செல்வத்தைப் " பொருள் " என்கிறோம். இது நிலை நில்லாது. பின், நிலை நிற்பது எது? அது "பரம்பொருள்" எனப்படும். பரம்பொருள் சுரப்பது "அருள்". அருள் வள்ளலாக விளங்குபவர் தான் காத்தல் கடவுளாகிய "கண்ணபரமாத்மா". அப்பெருமானுக்கு கோயில் அமைத்துக் குடமுழுக்குக் கண்டு தம்மைத்தாமே பெருமைப்படுத்திக் கொண்டார்கள் "சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம்"என்ற சமூகசேவைகள் நிறுவனத்தினர். குடமுழுக்கு வைபவத்தை முன்னிட்டு " நிசப்தம் " முதலாவது இலவச கைநூல் வெளியிடப்பட்டது.

அதுமட்டும் போதாதென்று இரண்டாவது வெளியீடாக இந்நூலையும் பிரசுரித்து வழங்க முன்வந்துள்ளனர்.

ஆலயக் குடமுழுக்கின் ஓராண்டு நிறைவில் நிகழும் சங்காபிஷேகம், அன்னதானம் முதலிய புண்ணிய நிகழ்வுகளுடன் சேர்த்து இதனைச் செய்வது மிகவும் பொருத்தமானதே.

இந்தச் சந்தர்ப்பத்தில், இவ்வாலயத்தில் எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கும் மகா விஷ்ணு மூர்த்தியை வணங்கி அடியேன் எனது மன அமைதிக்காகப் பாடிய அர்ச்சனைப் பாடலையும் அடக்கமுடன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**சி.க.பொன்னம்பலம்.**
நிர்வாக / திட்டமுகாமையாளர்,
சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதா சாரம்

நீ ஏன் அவசியமின்றிக் கவலைப்படுகின்றாய்?
யாருக்காக நீ பயப்படுகின்றாய்?
உன்னை யார் அழிக்க முடியும்?
ஆத்மாவிற்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை.
எது நடந்ததோ அது நன்மைக்காகவே நடந்தது.
எது இப்போது நடந்துகொண்டிருக்கிறதோ
அதுவும்நன்மைக்காகவேநடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
எது நடைபெற இருக்கின்றதோ அதுவும் நன்மைக்காகவே நன்றாக நடக்கும்.
நடந்ததை எண்ணிக் கவலை கொள்ளாதே.
நடப்பதைப் பற்றிச் சலனம் கொள்ளாதே.
நீ; எதை இழந்துவிட்டாய் என்று இப்போ அழுகிறாய்?
நீ எதைக் கொண்டுவந்தாய் அதை இழந்துவிட;
நீ எதை உருவாக்கினாய் அது அழிந்து போக;
நீ எதையும் கொண்டுவரவில்லை.
உன்னிடம் இருப்பதெல்லாம் இங்கிருந்து பெற்றவை.
உனக்குக் கொடுக்கப்பட்டதெல்லாம் இங்கிருந்து கொடுக்கப்பட்டவை.
நீ எடுத்துக் கொண்டதெல்லாம் இப்பிரபஞ்சம் உனக்கு வழங்கியவை.
உன்னால் அளிக்கப்பட்டதெல்லாம் இந்தப் பிரபஞ்சத்திற்காக அளிக்கப்பட்டவை.
வெறுங்கையோடு வந்தாய்! வெறுங்கையோடு போகப்போகிறாய்!
இன்று உன்னுடையது எதுவோ;
அது நேற்று வேறு ஒருவருடையது;
நாளை மற்றொருவருடையதாகும்.
இது உன்னுடையதென்று நினைக்கின்றாய்!
இதனால் அதிக ஈடுபாடும் கொண்டுள்ளாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பாசம் தான் உனது எல்லாத் துன்பங்களுக்கும் காரணம்; அறிவாயா?

மாற்றம் என்பது வாழ்வின் நியதி.

நீ எதை மரணம் என்கிறாயோ அதுதான் வாழ்க்கை.

எனது - உனது; சிறியது-பெரியது ; நமது -அவர்களது

இச்சிந்தனையை உன் மனதில் இருந்து அகற்று.

அதன் பிறகு எல்லாம் உன்னுடையதாகும்.

நீயே எல்லோருமாகவும் காட்சி தருவாய்.

இந்த உடல் உன்னுடையதல்ல

நீயும் இந்த உடலல்ல.

உடல் என்பது பஞ்சபூதங்களின் சேர்க்கையால்

உருவாகிப் பின் சிதறிப் போவது.

ஆனால் "ஆத்மா" அவ்வாறல்ல; அழிவற்றது.

அப்படியென்றால் நீ யார்?

பரந்தாமனை சரணடை.

அவர் ஒருவரே உனக்கு முடிவான துணை

இதை உணர்ந்தாயாகில் பயம்; துன்பம்; நிராசை

ஆகியவற்றிலிருந்து பரிபூரண விடுதலை அடைவாய்.

நீ எது செய்தாலும் அனைத்தையும்

கிருஷ்ணனுக்கே அர்ப்பணி;

இதனால் நிரந்தர பரமானந்தத்தை என்றும் எய்துவாய்.

-கிருஷ்ணார்ப்பணம்-

**தொகுப்பு – எஸ். விவேகாநந்தன் B.Sc.(வேலூரான்)**

**அகில இலங்கை சமாதான நீதவான்.**

**ஆலோசகர் – சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவேங்கடப் போற்றி மாலை

(01)

மின்னுலகு பொன்மகுட கிரணம் போற்றி
வெண்சங்கம் போற்றி போற்றி
விதிக்குமொரு விதியாகி மேல்நின்று சுழல்கின்ற
திருக்கையின் ஆழி போற்றி
மண்ணுமிப் பேருலக இன்பங்கள் தழையவிரி
மலரமுத விழிகள் போற்றி
மனம்கெட்ட பாதகர் இனம்சுட்டு நீறாக்கும்
மணித்தோள்கள் போற்றி போற்றி
இன்மதுரச் செம்பவள இதழ்கள் போற்றி
எழல்துளசி மாலை போற்றி
எமக்கருள் புரியவென வலக்கரம் அபயமாய்
எடுத்த பேரழகு போற்றி
சென்னிமிசை வைத்துயாம் தினம்தினம் தொழுகின்ற
சேவடி மலர்கள் போற்றி
சீருக்கும் பேருக்கும் பாருக்குள் வைகுந்தம்
வேங்கடம் போற்றி போற்றி.

(02)

வெள்ளிமலை பொன்மலை எத்தனை மலைகள்தான்
இருந்தாலும் என்ன மனமே
வேங்கடம் என்னுமொரு திருமலைப் பெயர்சொல்லி
வினைகளை அகற்று மனமே
உள்ளபடி தீர்த்ங்கள் உலகத்தில் பலகோடி
உண்டாயின் என்ன மனமே
உத்தமன் புஷ்பகரணி நற்தீர்த்த மாடியுன்
உடற்குற்றம் நீக்கு மனமே
கொள்ளையாய் மந்திரம் கூவிட எத்தனை
குவித்தாலும் என்ன மனமே
கோவிந்தன் பெயர்கூவி நாராயணா என்று
கோடிபயம் போக்கு மனமே
பள்ளத்தில் வீழ்கையில் ஆதாரமாய் எதைப்
பற்றுவாய் சொல்லு மனமே
பதறிவிழி நீர்பெருகப் பச்சைமால் திருவடி
போற்றி போற்றி மனமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(03)

ஆரா அமுதன் அன்பர்கள் நாயகன்
ஆதி மூர்த்தி
ஆல்இலைப் பாலகன் னாகிய சேவகன்
ஆயர் செல்வன்
சீராம னான தாமரைக் கண்ணன்
சீதை கேள்வன்
தேனாரும் சோலைக் காவேரி பாயும்
செல்வ ரங்கன்
காராரும் மேனி பாலாழி துயிலும்
கால மேகம்
கானங்கள் பாடி ஞானங்கள் ஓதும்
கருணை வள்ளல்
போரால் இலங்கை பொடிசெய்த பாதம்
போற்றி போற்றி
பொன் வேங்கடத்த மின்னார மார்பா
போற்றி போற்றி

(04)

ஆச்சியர் கடையிறு கட்டிச் சிவந்திடும்
அழகிய கரங்கள் போற்றி
அருமையார் மயிற்பீலி அழைந்திடக் குழலூதும்
அமுதவாய் போற்றி போற்றி
தாயார் யசோதை தழுவியே மகிழ்நீலத்
தளிர்மேனி போற்றி போற்றி
தங்கத் திருமகன் தங்கியே கொலுவேறும்
தடமார்பு போற்றி போற்றி
மாயாத வல்லரசு மாசுகள் தூசாக்கும்
மணித்தோள்கள் போற்றி போற்றி
மதுர பிருந்தாவனப் புழுதியில் தோய்ந்திடும்
மலரடிகள் போற்றி போற்றி
பாயாக அரவணைப் பள்ளிகொள் திருவிழிப்
பங்கயம் போற்றி போற்றி
பத்திக்கும் முத்திக்கும் தத்திக்கும் வேங்கடப்
பிரமனே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(05)

மலைநீலம் மலர்நீலம் மணிநீலம் கடல்நீலம்
மாயவன் மேனி காட்ட
மதிவெண்மை கதிர்வெண்மை மாதவன் துயில்கின்ற
பாற்கடல் நினைவை யூட்ட
இலைப்பச்சை தளிர்ப்பச்சை மரகதப் பச்சையவன்
இதயத்தின் கருணை நாட்ட
எழில்மாலைச் செக்கரும் தாமரை இதழ்களும்
தேவி சௌந்தர்யம் தீட்ட
சலனமிடும் வெயிலின் சரிகைகள் மால்பூண்ட
பொன்னாடை மெருகு கூட்ட
தங்க வைகறைகளோ அவனருள் நம்பிக்கைக்
கலசங்கள் எடுத்து நீட்ட
அலகிலா உலகுள்ள யாவையும் ஸ்ரீதேவன்
ஆனந்தம் பேசு தையா
ஆதியான் சோதியான் வேங்கடத் தெம்பிரான்
அடிகளே போற்றி போற்றி

(06)

கால மனைத்திலும் காவல் நடத்திடும்
கற்பக மாமணியாம்
கார்முகில் வண்ணனை எண்ணித் தொழுதிட
வேங்கடம் வாருங்களே
மூல பரம்பொருள் மோகனக் கண்ணனின்
பேரழகில் லயித்து
மோனத்திலே பர ஞானத்திலே நித்தம்
மூழ்கிடச் சேருங்களே
ஏலமுடன் கற்பூரம் மணக்கின்ற
ஏழுமலைத் தலத்தில்
ஏற்றமுற நிற்கும் ஆற்றல் அழகனைப்
போற்றிட வாருங்களே
நாலும் கொடுக்கின்ற நாயகன் பேரருள்
வெள்ளத்திலே திளைத்து
நாச வினைகள் வீசி முழக்குவோம்
போற்றிஜய போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(07)

காலம் வியக்கின்ற கலைகளும் உன்எழில்
காட்டும் திறம் உள்ளதோ?
கற்றும் முடியாத கல்வியால் உனதுசீர்
கண்டுரைத் திட முடியுமோ?
சாலப் பழையதாம் வேதங்கள் என்னும்உன்
பாத நிழல் தொடவல்லதோ?
சாண் ஏறினால் முழம் சறுக்கிடும் சாத்திரம்
உன் கருணை சாதிக்குமோ?
பாலமிடும் தத்துவக் குப்பைகள் உன்னருட்
பாற்கடல் துளி அறியுமோ?
பாதாதி கேசநலம் பாடும் கவிகள்உன்
பரிமளம் நுகர்ந்த துண்டோ?
நீலக் கொழுந்தாக நின்று திருவேங்கடக்
குன்றமால் மணி வண்ணனே
நேற்றின்று நாளையும் நின்னை முழுதறிந்தார் யார்
நேயனே போற்றி போற்றி

(08)

கயல்பாயும் கங்கைமுதல் அலையாயு மிலங்கைவரை
கவினுற நடந்த பாதம்
காதலுடன் மலர்மகள் அரவணைப் பாயலில்
கரங்களால் வருடும் பாதம்
அயலிலொரு பாறையை அகலிகை மாதாக்கி
அருள்செய்த இனிய பாதம்
அனுமனின் திருத்தோளில் அசுரர் படைநீறாக்க
அடிவைத்த புனித பாதம்
மயல்கொண்ட மாபலிக்கு மணிமுடியைப் பாதாள
மண்ணுக்குள் இட்ட பாதம்
மாபாரதப் போரில் அர்ச்சுனன் தேர்மீது
மலராக வைத்த பாதம்
இயலொடு இசையாடும் ஆழ்வார்கள் பாடலில்
எடுத்தடிகள் இட்ட பாதம்
இகபரம் நல்கிடும் நிகரற்ற வேங்கடன்
இருபாதம் போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(09)

காஞ்சித் திருநகர் வரதர் எனப்படும்
கற்பகமே போற்றி
காவிரி நடுவில் கண்வளர் கின்ற
கருமணியே போற்றி
பூஞ்சிற கசையும் மாலிருஞ் சோலைப்
புண்ணியனே போற்றி
புதுமழை முகிலாய் அனந்த புரத்தருள்
பொழிநிதியே போற்றி
தீஞ்சுவை யமுதாய் பிரிந்தா வனத்தில்
திகழ்ஒளியே போற்றி
திருக் குருகூரில் சடகோ பர்க்கொரு
தேன்குடமே போற்றி
ஊஞ்சலிடும் மனம் ஓர்நிலை ஆக்கிடும்
உன்னத மாமலையில்
உலகை அளந்தென் கவலை களைந்திட
உறைபவனே போற்றி.

(10)

பாண்டவப் பிரியாஎன்றும் பக்தவத் சலனேஎன்றும்
பரிந்து பாடி
பாற்கடல் பரமாஎன்றும் பத்மநாபன் நீஎன்றும்
பக்தி சூடி
ஆண்டருள் கண்ணாஎன்றும் அச்சுதா அழகாஎன்றும்
அன்பில் ஆடி
அர்ச்சா வதாராஎன்றும் ஹரியெனும் அமுதேஎன்றும்
அலைந்து தேடி
நீண்டால் நம்பிஎன்றும் நீலமா முகிலேஎன்றும்
நித்தம் நாடி
நித்தியப் பொருள்என்றும் நிமலனே முகுந்தாஎன்றும்
நெகிழ்ந்து கூடி
வேண்டுவோர்க் கனைத்தும்ஈயும் வித்தகன்மலர்ப் பூம்பாதம்
போற்றி போற்றி
வேங்கட ரமணனான வேணுகோ பாலன்பாதம்
போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11)

மேகங்கள் போலவே தாகங்கள் கொண்டன்பர்
மேவிடும் புனித மலையே
மேடுவாம் இமயத்தில் சேரும்உமை பாகரும்
மெச்சிடும் இனிய .மலையே
நாகத்தின் மீதிலே நர்த்தனம் செய்திட்ட
நாயகன் தெய்வ மலையே
நரசிங்க வடிவான நாதன்அருள் வெள்ளத்தில்
நம்பாலம் உய்யு மலையே
போதங்கள் கொடுக்கின்ற புண்ணியம் மழைபோலு
பொழிகின்ற ஜோதி மலையே
பொன்னிட்டும் எளியதோர் பூவிட்டும் வணங்குவோர்
புகழோங்கும் ஆதி மலையே
ஏகமாய் தனியோங்கும் இணையிலா எழுமலை
எம்பிரான் போற்றி போற்றி
எங்கள் இதயத்தில் உறைகின்ற திருவேங்கடத்து
எந்தையே போற்றி போற்றி

(12)

நீர்கொண்ட கடலிலே மச்சமாய் நீந்தியே
நீகொண்ட அவதாரமும்
நிலவுலகு காக்கவே நிமலனே கூர்ம
வராகமாய் அவதாரமும்
பார்கொண்ட துயரங்கள் பரிதிமுன் பணியாக
நரசிம்ம அவதாரமும்
பலிதன்னைப் பலிகொள்ள வாமனக் குறளாகி
வந்ததோர் அவதாரமும்
ஏர்கொண்ட பலராமன் எழில்கொண்ட கண்ணனாய்
எடுத்ததோர் அவதாரமும்
எரிதழல் சடைகொண்ட முனிபரசு ராமனாய்
நீவேந்த அவதாரமும்
சீர்கொண்ட கோதண்ட மேந்தியே உலகாண்ட
ஸ்ரீராம அவதாரமும்
செப்ப எளிதாகுமோ திருவேங்கடத் தெங்கள்
தெய்வமே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(13)

நாகம் குடைபிடிக்க யமுனைநதி வழிகாட்ட
நந்தன்மனை சென்ற பாலா
நாணல் குழலெடுத்து நறும்புன்னை குடைபிடிக்க
ராகம் இசைத்த கீதா
மேகம் இடிஇடிக்க மலையைக் குடைபிடிக்கும்
வேகம் உடைய வீரா
வேதம் குடைபிடிக்க தருமம் மடைதிறக்க
வேண்டியே நடந்த தூதா
தாகம் மிகக்கொண்ட பூமி குருட்சேத்ர
ரத்தம் குடித்த போது
தாழம் குடைபிடித்து கருணன் கொடைப் பிச்சை
தருமம் இரந்த நாதா
சோகம் குடைபிடிக்க திருவேங்கடச் சாரல்
தொழுதுநான் போற்றி நின்றேன்
துக்கமழை நீக்கிச் சுகத்தின் கொடைநல்கும்
தூயவா போற்றி போற்றி.

(14)

வர்ணங்கள் சிதறுவதில் வல்லதுன் மயிற்பீலி
தானோ? குழலோசையோ
மனதைக் கவர்வது இராம சௌந்தரியமோ?
கிருஷ்ணனின் புன்சிரிப்போ?
திருவடிகள் பட்டுச் சிலிர்த்தும் யமுனையோ
கங்கையின் பொங்கு புனலோ?
செப்புமுன் திருமார்பின் சிங்காரம் கொண்டது.
மாலையோ துளசிதானோ?
கரத்தினுக் குகந்தது கோதண்டமோ அன்றி
சரமழைச் சாரங்கமோ?
கருதுமுன் உறவுக்கு வல்லவன் இலக்குவ
வள்ளலோ வில் விஜயனோ?
அருமைமிகு உன்னிரண்டு அவதார மகிமைக்குள்
அடியேன் மயங்கி நின்றேன்
ஆதாரம் வேங்கடத் தன்னிலே நின்பாதம்
அருளுவாய் போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(15)

வலம்புரிச் சங்கேந்தி மாமலை மீதுற்ற
வாசுதேவனே போற்றி போற்றி
தடக்கையின் மீதிலே சுதர்சனச் சக்கரம்
தாங்கு முகுந்தனே போற்றி போற்றி
அலர்மேலு மங்கைக்கு இதயத்தில் இடம்தந்த
அமரர் தலைவனே போற்றி போற்றி
ஆயர் மனைதனில் வெண்ணைய்க்கும் பாலுக்கும்
ஆங்காந்த வாயனே போற்றி போற்றி
உலகத்தைக் காக்கவே இலையொன்றின் மீதிலே
உறங்கித் தவழ்ந்தவா போற்றி போற்றி
ஒருகோடி தீமைகள் அருகோடி வந்தாலும்
ஓட்டிடும் மாதவா போற்றி போற்றி
இலகும் திருப்பதி வேங்கடத்தில் உறை
என்னுயிர்த் தலைவனே போற்றி போற்றி
இச்சைக்கு நல்லஎன் பச்சைமால் அண்ணலின்
இருபாத தாமரை போற்றி போற்றி

(16)

அருவிகள் பாய்கின்ற திருவேங் கடத்திலென்
தண்ணருவி பாய நின்றேன்
ஆயிரம் மலர்கொண்டு அர்ச்சிக்கும் திருமலையில்
இதயமலர் கொண்டு வந்தேன்
இரவுகள் பகலாக்கும் எந்தைபே ரொளியின்முன்
பாவ இருளோடு நின்றேன்
எண்ணற்ற கோடிநிதி ஏழுமலை வாசலில்
ஏழையாய் நொந்து வந்தேன்
உறவுகள் அனைத்துமாய் ஓங்கு மாதவன்முன்னர்
ஒரு தனியாக நின்றேன்
உயர்துளசி மாலைகள் சாத்திடும் கோயிலில்
துயர் மாலையோடு வந்தேன்
சரணமே நீயென்று அரனாக நானுமுன்
தாமரைத் தாளில் வீழ்ந்தேன்
சங்கு சக்கரமொடு சாரங்க மேந்திய
தேவனே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(17)

மோகமத மாயைகளில் மூழ்கிடும பழிதீர
முதலாம் மலை ஏறியும்
மொழியுமுன் புகழினைப் பேசாத துயர்தீர
இரண்டாம் மலை தாண்டியும்
சோக வேதனைகளே சூழாமல் காத்திட
மூன்றாம் மலை ஏறியும்
சொன்னசொல் மாறாத தூய்மையே துலங்கிட
நான்காம் மலை தாண்டியும்
ஆகாயம் வீழ்ந்திடினும் அடியனுனை மறவாமல்
ஐந்தாம் மலை ஏறியும்
அன்னமிடு பேருக்கு சொர்ணமிகு மனம்வளர
ஆறாம் மலை தாண்டியும்
ஈகைக்குணம் என்னில் இழையோட நாடியுன்
ஏழாம் மலை ஏறியும்
என்னுயிர்க் குயிரான வேங்கடம் எய்தினேன்
இறைவனே போற்றி போற்றி.

(18)

முத்துக் களஞ்சிய ரத்தினக் கீதையை
மொழிந்த உன்குமுத வாயில்
மோகன ராதையை மோகிக்க வைத்தபுன்
முறுவல் பூத்து நின்றாய்
சித்திர ராகங்கள் தேனிலே தோய்த்துநீ
சிறுகுழல் ஊதி வந்தாய்
தெவிட்டுதல் இல்லாமல் வெண்ணெய் திருடியே
தின்பதில் மகிழ்ச்சி கொண்டாய்
வித்தா ரமாகவே வீதிமண் புழுதியும்
விளையாட்டில் வாரி உண்டாய்
விரிகின்ற உலகங்கள் தாயார் வியக்கவே
இதழுக்குள் காட்டி நின்றாய்
இத்தா மரைத்திரு வாய்திறந் தென்துயர்
என்னவென வினவி டாயோ
எழிலான பொழில்சேரும் அழகான வேங்கடத்து
ஏந்தலே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(19)

மாணிக்க நட்சத்திரங்க ளெல்லாம் ஆட
மதிகதிர் இரண்டு மாட
மண்ணாட விண்ணாட மலையாட நதியாட
மணிகடல் அலைகளாட
வாணியொடு பிரமனும் பரமசிவனாரும் உடன்
மாதரசி உமையுமாட
வானவர் கந்தருவர் கின்னரர் மற்றும்எழில்
அரம்பை ஊர்வசிகளாட
ஆணாடப் பெண்ணாட அகில உலகத்திலுள்ள
அனைத்துயிர்க் குலமுமாட
ஆனந்த நர்த்தனம் காளிங்க மடுவிலே
ஆடினாய் தேவ தேவா
கோணல்கள் படமெடுத் தாடுமென் உள்ளத்தைக்
கொண்டுநின் பாத முற்றேன்
குளியகடும் திருவடி கொண்டாடும் நெஞ்சத்தில்
கோபாலா போற்றி போற்றி.

(20)

நதிகளெலா மந்த நாதக் கடலினை
நாடியே வருவதுண்டு
நாலுவகை முகில்களும் கோலமா மலைதேடி
இளைப்பாற வருவதுண்டு
அதிரவரு தேர்களும் ஆலயம் வலம்வந்த
பின்நிலை சேர்வதுண்டு
ஆகாய மேலுலவும் ஆனந்தப் பறவையும்
மரக்கிளை அடைவதுண்டு
புதிதுபுதி தாகவளர் வேர்களும் நீருள்ள
பூமியைத் தொடர்வதுண்டு
போர்வீரன் அம்புகள் புயலாக இலக்கினைப்
போய்த்தைக்க விரைவதுண்டு
இதயங்கள் வேங்கடத் திருமலை நாடுவதும்
இயற்கையின் லீலை அன்றோ
இலக்கணம் பொற்பதம் சிக்கெனப் பற்றுவோம்
ஏழுமலை போற்றி போற்றி.

*முல்லைதாசன் ~ சென்னை அவர்களின் நூலிலிருந்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா விஷ்ணு அர்ச்சனை

| | | | |
|---|---|---|---|
| அரி | கோவிந்தா | அன்பே | போற்றி |
| சுரிகுழல் | மகளிர் | துணைவா | போற்றி |
| கருணைக் | கடலே | கண்ணா | போற்றி |
| உருகும் | அடியார் | உளத்தாய் | போற்றி |
| கோவர்த் | தனக்குடை | பிடித்தாய் | போற்றி |
| கோபியர் | போற்றக் | குழைந்தாய் | போற்றி |
| மாயம் | பலசெய் | மாதவா | போற்றி |
| ஆயர் | குலத்துக் | கரசே | போற்றி |
| பீதாம் | பரனே | பித்தா | போற்றி |
| ஆதா | ரப்பொருள் | ஆனாய் | போற்றி |
| பாம்பினில் | நடனம் | பயின்றாய் | போற்றி |
| பாம்பணை | யிற்றுயில் | பரமா | போற்றி |
| மதுசூ | தனனே | மாதவா | போற்றி |
| புதுமையிற் | புதுமை | புகுத்துவாய் | போற்றி |
| சங்கு | சக்கர | தாரீ | போற்றி |
| சங்கரப் | பிரிய | னானாய் | போற்றி |
| பார்த்தனுக் | கினிய | சாரதி | போற்றி |
| தீர்த்தா | திருமகள் | பாகா | போற்றி |
| பாண்டவர் | துயரம் | பறித்தாய் | போற்றி |
| பாரினில் | நீதி | படைத்தாய் | போற்றி |
| தேவகி | பாலா | தேவே | போற்றி |
| தேவர்கள் | இன்னல் | தீர்த்தாய் | போற்றி |
| கம்சனைக் | கொன்ற | கதாகரா | போற்றி |
| அம்சமாய் | என்னுள் | அமர்ந்தாய் | போற்றி |
| பத்ம | நாபனுன் | பதமலர் | போற்றி |
| பக்தர்கட் | கருளும் | பரனே | போற்றி |
| முரளீ | தரனே | மோகனா | போற்றி |
| முக்தியை | நல்கும் | முதல்வா | போற்றி |
| மோகினி | ரூபம் | ஏற்றாய் | போற்றி |
| மோகனனே | யுன் | பூவடி | போற்றி |
| நாபிக் | கமல | நாயகா | போற்றி |
| தாயினும் | இனிய | தயாபரா | போற்றி |
| நோய்பிணி | வஞ்சனை | தீர்ப்பாய் | போற்றி |
| நோற்பார் | தீவினை | துடைப்பாய் | போற்றி |
| உற்றவர்க் | குதவும் | உபேந்திரா | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கற்றவர் | போற்றும் | கண்ணா | போற்றி |
| நாரா | யணனே | நம்பா | போற்றி |
| நாரா | யணிமகிழ் | நாயகா | போற்றி |
| கருட | வாகனத் | திறையே | போற்றி |
| கருதுவார்க் | கருளுங் | கற்பக | போற்றி |
| உருக்கு | மணிபுகழ் | உத்தமா | போற்றி |
| செருக்கெலாம் | போக்கும் | தேவே | போற்றி |
| சத்திய | பாமா | சமேதா | போற்றி |
| நித்திய | சொருப | நிதியே | போற்றி |
| சாராங்க | பாணிநின் | தாளிணை | போற்றி |
| வீரங்கொ | ளுந்தன் | வியன்தோள் | போற்றி |
| வாமனா | ராமா | நரசிம்மா | போற்றி |
| காமநோய் | தீர்க்கும் | கடவுளே | போற்றி |
| கேசவா | அடியவர் | நேசனே | போற்றி |
| யாசக | னாய்களம் | சென்றவா | போற்றி |
| காயாம்பூ | மேனிக் | கடவுளே | போற்றி |
| தாயாகிக் | காக்கும் | தயாநிதி | போற்றி |
| சூழ்வார் | வேண்ட | ஈவாய் | போற்றி |
| ஆழ்வார் | தமிழில் | அடங்குவாய் | போற்றி |
| ஆண்டாள் | அணிதார் | அணிவாய் | போற்றி |
| காண்பார்க் | கினிய | காட்சி | போற்றி |
| மாவலி | யிடத்தே | இரந்தாய் | போற்றி |
| மண்ணளந் | தருளிய | வள்ளலே | போற்றி |
| கர்னன் | செய்தவம் | கரந்தாய் | போற்றி |
| களத்தினிற் | பார்த்தனைக் | காத்தாய் | போற்றி |
| பின்னம் | செய்பவர்க் | கிரந்தாய் | போற்றி |
| பிரிவிலா | தென்னுள் | படர்ந்தாய் | போற்றி |
| கோமள | வண்ணக் | குமரா | போற்றி |
| கோபியர் | கண்ட | கோவே | போற்றி |
| திவ்விய | மேனித் | திவ்வியா | போற்றி |
| திரண்மா | மழைமுகில் | வண்ணா | போற்றி |
| ஆவினம் | காத்த | அண்ணலே | போற்றி |
| பார்முழு | தேத்தும் | பரந்தாமா | போற்றி |
| சகடம் | உதைத்த | சண்டீ | போற்றி |
| சார்ந்தார்க் | கருளும் | தயாநிதி | போற்றி |
| யசோதை | வளர்த்த | ஜனார்த்தனா | போற்றி |
| யமபயம் | நீக்கும் | இமயவா | போற்றி |
| பாலாளி | யிற்றுயில் | பண்பா | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| பாம்பணை | மேவிய | பரமா | போற்றி |
| இரணிய | வதம்செய் | இறையே | போற்றி |
| பிரக | லாதனுக் | கினியாய் | போற்றி |
| ஐயனார் | சுவாமியை | அருளினாய் | போற்றி |
| அருள்மிகு | "பேச்சி" | ஆனாய் | போற்றி |
| அசுவ | வடிவுகொண் | டாண்டாய் | போற்றி |
| பஸ்மா | சுரனுயிர் | பறித்தாய் | போற்றி |
| கூர்மாவ | தாரம் | கொண்டாய் | போற்றி |
| ஆர்வமோ | டரனை | அடைந்தாய் | போற்றி |
| பரசு | ராமனாய் | வந்தாய் | போற்றி |
| பலபத்தி | திரப்பெயர் | பூண்டாய் | போற்றி |
| வராகவ | தாரம் | ஏற்றாய் | போற்றி |
| சாராசர | மனைத்தும் | அளந்தாய் | போற்றி |
| மீனுரு | வாகி | மிளிர்ந்தாய் | போற்றி |
| கானிடைக் | குழலிசை | காட்டினாய் | போற்றி |
| இராவண | னைவதம் | இயற்றினாய் | போற்றி |
| இராக்கத | குணத்தை | அழிப்பாய் | போற்றி |
| ஆஞ்ச | நேயருக் | கருளினை | போற்றி |
| வாஞ்சையோ | டுறுபவர் | வழித்துணை | போற்றி |
| வாலியின் | வஞ்சனை | தடிந்தாய் | போற்றி |
| மேதினி | யோர்க்கறம் | புகட்டினாய் | போற்றி |
| மரகத | மேனிகொள் | மாமணி | போற்றி |
| சிரமதிற் | சேவடி | சூட்டுவாய் | போற்றி |
| படைத்தற் | கடவுளைப் | படைத்தாய் | போற்றி |
| பசும்பூந் | துளசி | அணிவாய் | போற்றி |
| துரோபதைக் | கருளிய | தூயா | போற்றி |
| பரோப | காரப் | பண்பா | போற்றி |
| ஆனிரை | மேய்த்த | அறவா | போற்றி |
| சானகி | மருவிய | தலைவா | போற்றி |
| ஏழையாள் | இறைவா | இணையடி | போற்றி |
| சுமையாம் | பாவம் | துடைப்பாய் | போற்றி |
| அறிதுயில் | கொள்ளும் | அமுதா | போற்றி |
| பிறிதோர் | துணையும் | கண்டிலேன் | போற்றி |
| போற்றி | போற்றியென் | வாழ்முதல் | போற்றி |
| போற்றி | போற்றி | சயசய | போற்றி |

**சி.க. பொன்னம்பலம், நிர்வாக / திட்ட முகாமையாளர்**
**சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாவிஷ்ணுவின் பத்தாவது அவதாரம் எப்போ?

கல்கி பிறந்துவிட்டது என்று பலரும்; இன்னும் பிறக்கவில்லை என்று சிலரும் பிரசாரம் செய்துவரும் இந்நாளில்; அவதாரநிலை, அதன்தன்மை, மகிமை பற்றி யான் அறிந்த நூல்கள், அனுபவம், அறிவாளர் கருத்து ஆகியவை கொண்டு தங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

- புனித பரதபூமியில் சரஸ்வதி நதிக்கு அண்மையான சம்பளக் கிராமத்தில் விஷ்ணுயசஸ் என்பவருக்கு ரேவதி நட்சத்திரத்தில் 'கல்கி' என்னும் பெயரில் மஹாவிஷ்ணு புத்திரராகப் பிறப்பார் என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது.

- எம்பெருமான் சிவபெருமான் வெண்குதிரையையாகவும், மஹாவிஷ்ணு போருக்குரிய கவச உடையில் அதன் மீதமர்ந்து கைகளில் வாளும் கேடயமும் ஏந்தி, அரசன் போல் அதர்மம் செய்யும் அனைவரையும் கொன்று குவிக்கின்றேன் எனும் பிரதிக்ஞையுடன் எழுந்தருளி"கலி" நிவர்த்தியாகும் என புராணங்கள் எடுத்தியம்புகின்றன.மஹாவிஷ்ணுவின் ஒவ்வொரு அவதார ரூபங்கள் வரையும் போது"கல்கி" அவதாரத்தை இப்படித்தானே வரைகின்றார்கள். இது இந்துமதம் நம்பிக்கையின் தத்துவம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

- கிருஷ்ண பகவானின் பொற்கமல திருப்பாதங்கள் பூமியில் பதிந்திருக்கும் வரை கலியானது பூமியை சிறிதும் ஆக்கிரமித்துக் கொள்ள முடியவில்லை. பகவான் "வைகுண்டம்" சென்ற அன்றே இவ்வுலகில் "கலி" புகுந்தது. அதுவே "கலியுக" ஆரம்பமானது.மீண்டும் "கல்கி"யாய் மகாவிஷ்ணுவின் திருப்பாதம் பூமியில்படும் கணமே கலி ஓடும், கலி தோஷங்கள் மறையும், அன்றே கிருதயுகத்தின் தொடக்கமாகும். அப்போது "ஸத்வ" குணம் எங்கும் இருக்கும்; ஞானமும் தவமும் அனைவருக்கும் ருசிக்கும்.

- இன்னுமொரு இடத்தில் ஜோதிடவல்லுனர்கள், சந்திரன் - சூரியன் - குரு ஆகிய மூன்றும் 'பூச' நட்சத்திரத்தில் ஒரே ராசியில் எப்போ கூடுகின்றார்களோ அதுவே கிருதாயுகம் என்கின்றனர். குருவும் சந்திரனும் ஒன்றுக்கொன்று பகை என்று ஜோதிடம் கூறுகிறது. எனவே இவர்கள் ஒன்று சேர்வது "பகை" ஒழிந்தது எனும் பொருளாகும். மேலும் சந்திரனையும் சூரியனையும் ஒருங்கே பார்க்க முடியாது; எனவே அவர்கள் இணைவது "ஸத்வ" குணத்தின் அடையாளம். பூச நட்சத்திரம் போட்டி, பொறாமை, ஆசை இல்லாத சிறந்த குணத்தை 'பூச' நட்சத்திரம் சொல்வதாகவும் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அடுத்ததாக கலியின் முடிவிற்கு முன் பிரளயம், அதற்குமுன் யுகதர்மம் எனும் ஒழுங்குப்படி காலம் அமையும் எனின் கலியின் முதிர்ச்சிக்கு நாம் இன்னும் வரவில்லையே?

  யுகதர்மம்→ பிரளயம் → கலியின்முடிவு

  கலிகாலத்தில் "தமோகுணங்களான சூது, பொய், சோம்பல், உறக்கம், துக்கம், மதிமயக்கம், அதிக காமவேட்கை, பயம், அற்பத்தனம் ஆகியன மேம்படும் காலம் "கலி" ஆகும்.

- க, கா, கோ இம்மூன்றின் சத்தம், அதாவது "கங்கை - காயத்ரி - கோமாதா" என்பன பற்றிய பேச்சு அற்றுப்போகும் காலகட்டமே கலியின் உச்சக்கட்டமாகும். கங்கை முழுவதும் வற்றிவிடும்; காயத்ரி மந்திரம் எங்கும் உச்சரிக்கப்படாது,(பிராமணனின் பிராமணத்தன்மை அறவே அற்றுவிடும்) பசு இனங்கள் முற்றாக அழிந்து காணப்படும். பாவத்தின் உச்சநிலை, முற்றுமுழுதான கலியின் ஆக்கிரமிப்பில் இருக்கும். பூமியில் துஷ்டர்களை அழிக்க பகவான் "கல்கி"அவதாரம் எடுப்பார் என்பது உபதேசம். இந்நிலைக்கு இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும்.

- பசி-பட்டினி-பஞ்சம் இவற்றின் உச்சக் கட்டத்தில், மழையின்றி- பயிரின்றி- மக்கள் நடமாடும் பிணங்களாக, பிசாசுகளா? எனும் வகையில் எலும்புக் கூடுகளாய்த் திரியும் காலம் கலிகாலம் எனவும் கொள்ள இடமுண்டு. இந்நிலையும் காண எக்காலமாகும்.

- தீவிரவாதம் - பயங்கரவாதம்- கொலை - கொள்ளை - உரிமைபறிபோதல் என்ற நிலையில் எப்போதும் எதுவும் நடக்கும் - பறிபோகும் - காவல் இல்லை - கேள்வி இல்லை - பயத்தின் கொடுமையால் உணர்ச்சியற்று - பந்தமற்று - விரக்தியுடன் மாந்தர் வாழும் காலம் கலிகாலமே. எமது நாட்டில் இந்நிலை ஆரம்பமே என்றால் பொருந்தும்.

- வாயுதேவன் தன்னை அடக்கிக் கொள்வான். புவனமெங்கும் காற்று இல்லா நிலை எனச் சித்தாந்தம் கூறுகிறது.தற்சமயம் எம்மைச் சுற்றியுள்ள காற்று அசுத்தமாகி வருவது கலியின் ஆரம்பம் என்று கருத இடமுண்டு.

- அனைத்திற்கும் மேலாக, கலியின் உச்சத்தில் பூமாதேவி பொறுக்க முடியாமல் பூமி வெடித்துச் சிதறும் என்று பெரியவர்கள் கூறுகின்றனர். அப்போது தாயைத் தனயன் கொள்ள எண்ணும் கணம்" ஆகும். பூமியில், காமவெறி மிஞ்சி தன்மனைவி,பிறர்மனைவி என்ற நிலை கடந்து பின்சகோதரி உறவும் போய், தன்னை ஈன்ற தாயையே தகாத நோக்கோடு தனயன் பார்க்கும் விகற்ப நிலை வரும் போது பூமி சிதறும் எனச் சொல்லப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❁ இவற்றைவிட இன்று நாம் பார்ப்பது - வெடி - நாட்டு மக்களை ஈவிரக்கமின்றி கொல்லும் அரசு - நாட்டையும் அதன் வளத்தையும் அழிக்கும் குண்டுகள்- அணுவாயுத உற்பத்தி - தன்னால் படைக்க முடியாத மனித உயிர்களை அழிக்கும் மனித முயற்சியின் விபரீத ஞானமான விஞ்ஞானம் என்பன அனைத்தும் சோர்ந்து ஓய்ந்து மீண்டும் கத்தி,கேடயம், கொண்ட காலம் தோன்றும் எனும் பிரக்ஞையுடன் "கல்கி" சதுர்யுக முடிவைக் காண்பிப்பார்.

எனவே இப்படிப் பலவிதமாக ஆராயும் போது கல்கி அவதாரம் இப்போ இல்லையே எனலாம். ஆனால் கலியுகமாகையால் மதிமயக்கத்துடன் மேற்கூறியவற்றின் சாயலான செயற்பாடுகள் அமையப்பெறும்.

பகவான் இக்காலத்தில் நான்- எனது என்ற அகங்காரத்தை அழித்து தன்னில் சரண்புகக் கூறியுள்ளார். இதுவே கலியின் பிடியில் இருந்து விடிவுகாணும் வழியாகும்.

- கிருஷ்ணார்ப்பணம் -

~வேஹாரான்~

*"தெய்வ சிந்தனை நிறைந்தால் சரீரம் தேவாலயமமாகும். அது இல்லாவிட்டால் அருமையான வீடு நாளடைவில் காடாகும். தேவாலயத்தை நாம் தேடி வேறு எங்கும் செல்லத் தேவையில்லை.நாவில் தெய்வ நாமம் பக்தியுடன் தாண்டவமாடினால் உங்கள் சரீரம் தேவாலயமாமகிவிடும். அது புனிதமாய் இருந்தால்தான் தெய்வம் அங்கு தங்கும்."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதையில் எத்தனை கீதை

❊ சீடனுடைய பொருளை அபகரிக்கும் குருமார்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். ஆனால் சீடனுடைய ஆன்ம பசியை நீக்க வல்ல குரு கிடைப்பதரிது என்றே நினைக்கின்றேன்.

**- குருகீதை.**

❊ அஞ்ஞானம் என்ற பெரிய நல்லபாம்பால் தீண்டப்பட்டு "நான் கர்த்தா" என்ற விஷம் ஏறியவனாய் இருக்கிறாய்; "நான் கர்த்தா அல்ல" என்ற அறிவாகிய அமுதத்தை உண்டு சுகமாக இருப்பாயாக.

**– அஷ்டாவக்ர கீதை.**

❊ ஆத்மா எங்கும் எப்போதும் ஏகமாய் இடைவெளியற்றதாய் வியாபித்திருக்கிறது. "நான் தியானம் செய்பவன்; இறைவன் தியானத்தின் விஷயம்" என்று அக்ஞானம் காரணமாக அகண்டமான பொருள் துண்டமாக்கப்படுகிறது.

**- அவதூத கீதை.**

❊ எவன் ஆத்மாவிலேயே ரமித்துக் கொண்டு, திருப்தி உள்ளவனாய் ஆத்மாவிலேயே சந்தோஷமடைந்து காணப்படுகின்றானோ, அவன் செய்ய வேண்டிய கர்மா ஒன்றுமில்லை.

**-பகவத் கீதை.**

❊ இரு எழுத்துக்களுடைய சொல் பந்தத்தைக் கொடுக்கிறது. மூன்று எழுத்துக்களுடைய சொல் முக்தியைத் தருகிறது. 'மம' (என்னுடையது) என்ற இரு எழுத்துக்களால் பந்தம் ஏற்படுகிறது. 'ந-மம' (என்னுடையதல்ல) என்ற மூன்று எழுத்துக்களால் மோட்சம் கிடைக்கின்றது.

**- அனுகீதை.**

❊ இந்த மகாபோகங்கள் ( உலக இன்பங்கள் ) என்பவை யாவை? இந்த உறவினர்கள் யார்? குழந்தை இருளில் பிசாசைக் கண்டு பயப்படுவது போல் நான் கற்பனைகளை செய்து கொண்டு கலங்குகிறேன்.

**- ஜனக கீதை.**

❊ ஞானத்தை அடைவதில் விருப்பமுள்ள அறிஞன் நூல்களை நன்கு ஆராய்ந்து, தானியத்தை விரும்புபவன் அரிசியை எடுத்துக் கொண்டு உமியைத் தள்ளி விடுவது போல், சாரத்தைக் கிரகித்துக் கொண்டு நூல்கள் எல்லாவற்றையும் எறிந்துவிட வேண்டும்.

**- உத்தரகீதை.**

**நன்றி: ராமகிருஷ்ண விஜயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் உயர்ந்தவன்?

ஒரு சமயம் வைகுந்தத்திலே ஸ்ரீமன் நாராயணனை நாரதமுனிவர் தரிசித்து நமஸ்கரித்து "ஓம் நமோ நாராயண"எனும் மந்திரம் சொல்லி வணங்கும் காலை, பெருமான் நாரதரைப் பார்த்து உலகிலேயே உயர்ந்தவர் யார்? என்ற வினாவைத் தொடுத்தார்.

நாராயணப் பெருமான் இவ்வாறு திடீரென இத்தகைய வினாவை எழுப்பியமை நாரதருக்கு பெருஞ்சஞ்சலத்தை ஏற்படுத்திற்று. சற்றுச்சிந்தித்தார். உலகனைத்தையும் பஞ்ச பூதங்களே ஆக்கிரமித்துள்ளதால், அவைதான் பெரியவை என்றார் நாரதர். அப்போ பகவான் பஞ்சபூதங்களிலே யார் பெரியவர் என்று கேட்க பேச்சு நீண்டது.

நாரதர்: தண்ணீர் அதிக நிலப்பரப்பை அடக்கியுள்ளதால் அதுவே பெரிது.

நாராயணன்: (சிரித்தார்) நாரதா! இந்த சமுத்திரத்தையே குறுமுனி அகத்தியன் தன் கமண்டலத்துள் அடக்கியதை அறியாயோ?

நாரதர்: ஆம், ஆம், அறிவேன். அகத்தியர்தான் பெரியவர்.

நாராயணன்: குறுமுனி அகத்தியனா? அவர் எங்கிருக்கிறார்?

நாரதர்: ஆகாயத்தில் நட்சத்திரங்களாக ஜொலிக்கிறார்.

நாராயணன்: அப்படியானால் நட்சத்திரங்களா பெரிது?

நாரதர்: ஆம் சுவாமி.

நாராயணன்: நாரதா! இச்சிறு நட்சத்திரங்கள் இப்பரந்த ஆகாயத்தில் சிதறிக் கிடக்கின்றன. அப்படியானால் ஆகாய மன்றோ பெரிது.

நாரதர்: ( யோசிக்கிறார்) ஆமாம் சுவாமி, ஆகாயமே பெரிது.

நாராயணன்: என்ன நாரதா! ஈரடியில் ஓரடியால் நான் ஆகாயத்தையே அளந்தேனே.

நாரதர்: ஆம் சுவாமி, தாங்கள்தான் பெரியவர்; அனைத்தையும் அடக்கியவர்

நாராயணன்: (சிரித்தார்) நாரதா! என்னையே கட்டிப்போட்டு தன்வயப்படுத்தினானே சகாதேவன் அறியாயோ?

நாரதர்: நன்கு அறிவேன் சுவாமி.

நாராயணன்: அப்போ யார் பெரியவன்?

நாரதர்: சகாதேவனே பெரியவன்.

நாராயணன்: உண்மை. யார் என்னைப் பூரண நம்பிக்கையுடன் அன்போடு வழிபடுகின்றார்களோ நான் அவர்கட்குப் கட்டுப்படுகின்றேன்.அதனால் அவர்களே பெரியவர்களாகின்றார்கள்.

~வி .ரேணுகாந்த் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாளைநகர் வாருங்களேன்!

காலமெல்லாம் எமைக்காக்கும் கற்பகமணியாம்
கார்முகில் வண்ணனைத்தினம் வணங்கிட(த்)
தாளைநகர் வாருங்களேன்!
வானவரும் போற்றும் ஆழிக்கண்ணன் பேரழகில் மயங்கி
மோனத்தில் பர்ஞானத்தில் மூழ்கித் திளைத்திட(ச்)
சரீரம் சேருங்களேன்!
மலருடன் கற்பூரம் மணக்கின்ற நிசப்த பதியில்
ஏற்றமுற நிற்கும் ஆற்றல்மிகு அழகனைப்
போற்றிட வாருங்களேன்!

கங்கை முதல் அலையொடு தமிழிபாயு மீழம்வரை
கவினுற நடந்த தூய பொற்கமலப் பாதம்
பணிந்திட வாருங்களேன்!
அருமையாய் மயிற்பீலி அசைத்திடக் குழலூதும்
அமுதவாய் கண்டு பக்தி பரவசம்
அடைந்திட வாருங்களேன்!
தங்கத் திருமகள் தங்கியே கொலுவேறும்
தடமார்பன் எழில்கண்டு நித்தம்
வணங்கிட வாருங்களேன்!

ஆயர் மனங்களை அன்பால் வென்று குவித்தவனை
ஆயிரம் மலர்கொண்டு ஆனந்தமாய்
அர்ச்சிக்க வாருங்களேன்!
மேகம் இடிஇடிக்க மலைக்குடை கொண்டு
தேகம் நனையாது காத்த கண்ணனைப்
பாடித்துதித்திட வாருங்களேன்!
தாகம் கொண்ட பூமி குருஷேத்திரம் நடத்துகையில்
தாழம் குடையொடு கர்ணன் கொடை ஏற்றவனைப்
போற்றிட வாருங்களேன்!

சோகம் குடைபிடித்து அல்லலுறும் மாந்தரின்
சாபம் நீக்கி சுகமனைத்தும் வழங்கிடும் நாதனைக்
கண்டுதொழ வாருங்களேன்!
உயர்துளசி மாலையை தோளில் சுமந்த மாதவனின்
துயர் நீக்கி உயர்வுதரும் தாமரைத் தாள்
பணிந்திட வாருங்களேன்!
பக்திக்கும் முக்திக்கும் தித்திக்கும் எம்பெருமான்
விஷ்ணுப் பரம்பொருளைக் கண்டு
தொழுதிட வாருங்களேன்!

- வேலூரான்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணாவதாரம் பற்றி ஒரு நோக்கு

எமது இந்து தத்துவத்தின் அவதாரக் கோட்பாட்டில் விஷ்ணு முதன்மை பெறுகின்றார். இந்த மகாவிஷ்ணு ஈரேழு புவனங்களையும் காப்பவர். காத்தற் கடவுள் அவர். அதற்காகப் பல அவதாரங்களை எடுத்து அருள்புரிந்துள்ளார். மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கிருஷ்ணன் போன்ற அவதாரங்களை மகாவிஷ்ணு இப்பூமியில் எடுத்துள்ளார். மானிடர் மற்றும் உயிரினங்களுக்கு அனுக்கிரகம் செய்யும் பொருட்டே அவதாரங்களை எடுத்துப் பல திருவிளையாடல்களைப் பகவான் நடாத்தியுள்ளார்

மகாவிஷ்ணு பல அவதாரங்களை ஏன் எடுக்கவேண்டும் என்று சற்றுச் சிந்திப்போமாகில் - கீதையில் கூறப்பட்டவாறு, 'அறம் குன்றி மறம் தலைப்பட்ட காலத்தில் அறத்தை நிலை நிறுத்தவும், மறத்தை ஒழிக்கவும் நல்லோரைக் காக்கவும், தீயோரை ஒறுக்கவும் தான் பிறவி எடுப்பதாகக் கூறியதிலிருந்து எம் சிந்தனைக்கு விடைகிடைக்கின்றது.

யசோதையின் மடியில் வளர்ந்த கண்ணன் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் வேளையில் தன்னைக் கொல்வதற்கு ஏவப்பட்ட வற்சாசூரனைப் பிடித்து விளாமரத்தில் மோதிக் கொன்றான். மலைப்பாம்புருக் கொண்டு வந்த அசுரனின் வாயுட் புகுந்து அவனைக் கொன்றான். யமுனையில் உள்ள காளிங்க மடுவின் நச்சு நீரைப் பருகி இறந்த கோபாலனைக் கண்ணன் உயிர்ப்பித்தான். கொடூரமாகப் பரவி வந்த காட்டுத்தீயை விழுங்கி மக்களையும் ஏனைய உயிரினங்களையும் காப்பாற்றினான்.

ஆயர்களின் செல்வமான ஆனினத்தின் சிறப்புக்குக் காரணம் மழை. இந்த மழையைத் தருபவன் இந்திரனே என்று ஆயர்கள் நம்பி, ஒவ்வொரு வருடமும் இந்திரனுக்கு விழா எடுப்பார்கள். குறும்புத்தனம் உடைய கண்ணன் அந்த விழாவைத் தடுத்த பொழுது கோபம் கொண்ட இந்திரன் பெருமழையைப் பெய்வித்தான். உடனே கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து பேரழிவிலிருந்து உயிர்களைக் காப்பாற்றினான்.

குழந்தைப் பராயத்தில் கண்ணன் பல அற்புதமான திருவிளையாடல்களை நிகழ்த்திக் காட்டினான். இவ்வாறு நிகழ்த்திக்காட்டிய ஒவ்வொரு செயலையும் உற்று நோக்கும் போது நல்லவர்களைப் பாதுகாப்பதாகவும், தீயவர்களை ஒழிப்பதற்காகவுமே அமைந்திருப்பதை நாம் அறியமுடிகின்றது. தீய சக்திகளின் அகோரப் பிடியிலிருந்து நல்லவர்களை விடுவித்து அவர்களுக்கு வாழ்வளித்து நீதியையும் நன்மையையும் இப்பூமியில் நிலைபெறச்செய்தலே கிருஷ்ணவதாரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான நோக்கம் என்பதை உணரமுடிகிறது.

கிருஷ்ண பரமாத்மா துட்டர்களை அழித்து, துட்டர்களின் பிடியிலிருந்து நல்லவர்களைக் காக்கும் செயல் புரிவதோடு மட்டும் நின்றுவிடாது, அதற்கப்பாலும் சென்று கீதையின் மூலம் மாந்தர்களுக்கு நல்லறிவு புகட்டி அறியாமையாகிய இருளை அகற்றி தீமைகள் மேலும் நெருங்காமலும், நல்லவர்கள் தீமையைச் செய்யாதிருப்பதை உறுதிப்படுத்துவதாகவும் செய்துள்ளார். கீதையின் வழியில் மக்கள் செல்லும் போது மீண்டும் தீமை தலையெடுக்கவோ , அசுரத்தனம் காட்டவோ முடியாது, உக்கிரமான போர் நிலையில் சோர்வடைந்து போய் நின்ற அருச்சுனனுக்கு கீதையின் உபதேசங்கள் கிருஷ்ணபரமாத்மாவினால் அருளப்பட்டது. பார்த்தனுக்கு மட்டும் சாரதியாகக் கண்ணன் அமையவில்லை. இந்த உலகிற்கே சாரதியாக விளங்குகின்றான். அவனின்றி ஓரணுவும் அசையாது என்று கூறுவர். அவ்வாறு அசையாது நின்ற அர்சசுனனை அசைத்துப் போர்க்களத்தில் இயங்க வைதத்து கீதை.அவ்வாறான சக்தி கொண்டது கீதை.

கிருஷ்ண பரமாத்மாவின் கீதோபதேசத்தினாலே தீயோரான துரியோதனன் முதலியோர் அழிக்கப்பட்டனர். இன்றும் கூட தீயனவற்றை ஒழித்துக் கொண்டே கீதை இருக்கிறது. வாழ்விற்கு ஒளிதந்து நல்வழிகாட்டும் கலங்கரை விளக்காகக் கீதை நின்று விளங்குகிறது. இக்கீதையானது, கிருஷ்ணாவதாரம் நிகழ்ந்த படியாலேதான் உலகிற்குக் கிடைத்தாகும்.

பாரதப்போரை நடத்தி முடிக்கவேண்டிய பொறுப்பு கண்ணனுக்கு இருந்த படியாலேதான் கிருஷ்ணாவதாரம் எடுத்தார். இக்கிருஷ்ணாவதாரம் எடுத்த கண்ணன் மண்முனைப்பற்று பிரதேசத்தின் தாழங்குடா கிராமத்தில் அமையப்பெற்ற "சரீரம்" நிறுவனத்தின் தலைமையகத்தில் கோயில் கொண்டு அருள் பொழிகின்றார். அவரை நாமும் வழிபட்டு உய்வோமாக.

**கு.வன்னியசிங்கம் B.A**
**செயலாளர்,**
**சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தல் கடவுளரின் கால் வண்ணம் கண்டோம்

"தர்மம் குன்றி அதர்மம் தலையெடுத்து உலகில் கொடுமை தாண்டவமாடும் போது நான் அவதரிக்கின்றேன். துன்பத்தினால் கலங்கித் துடிக்கும் மக்களைக் காத்து அருள்புரிந்து வருவேன்" என்று பகவத் கீதை வாயிலாகக் கூறிய பகவான் ; அருள்புரிந்த விதங்கள் பலப்பல.

அதர்ம வழிசென்று கொடுமை புரிந்த கொடியவர்களைக் கொன்றழித்து அவர்களுக்கு மேன்நிலை புரிந்தவாற்றினையும், தன்னை பக்தியுடன் பணிந்து போற்றியவர்க்கும் அருள் புரிந்தவாற்றினையும் ஆய்வு செய்து பார்ப்பதே இவ்வுரை நடையின் நோக்கமாகும். குறிப்பாகத் தன்னைப் பணிந்து பாதக்கமலங்களைப் பணிந்தவர்களுக்கு பகவான் செய்த அருட்பேற்றினைப் பார்ப்பது எமது முழு நோக்கமாகும்.

பகவான் எடுத்த ஐந்தாவது அவதாரமான வாமன அவதாரத்தில் 3அடி மண்கேட்டு; ஈரடியாலே மூவுலகையும் (பாதாளம், மண்ணுலகு, விண்ணுலகு ) அளந்து; மூன்றாவது அடியை மாவலியின் தலைமேல் வைத்து; அவனை அப்படியே (காலினால்) அழுத்தி அவனின் ஆணவம், செருக்குகளை அகற்றி; வதைத்து முத்திப்பேறு அவனுக்குக் கொடுத்தார்.

"நெடுமாலாகி ஈரடியால் மூவுலகையும் அளந்து, மாவலிக்கு
முத்தியளித்தமை வியப்பதற்குரிய விந்தையன்றோ"

இராமவதாரத்திலும் பகவான் கால் வண்ணம் காண்கின்றோம். பாலகாண்டத்தில் ஸ்ரீ இராமன் விஷ்வாமித்திர முனிவனின் வேள்வி காத்துவிட்டு மீண்டு வரும்போது காட்டில் கல்லொன்றை மிதித்து அதனை உயிர்பெறச் செய்ததும் நாம் கண்டு வியக்கும் விந்தை. தன் கணவனால் கல்லாகச் சாபமிடப்பட்ட அகலிகை என்பாள் ஸ்ரீ இராமனின் கால்கள் பட்டு உயிர் பெற்றெழுந்தவளாவாள்.

அயோத்தி முதல் தென்னிலங்கை வரை கால்களாலேயே நடந்து, நடந்து காடு, மலை, கடல் என்று கடந்து வந்ததும் ஓர் அற்புதம். இந்த வேளையில்தான் வாலியை வதைத்த படலத்தில் பாம்பு போல் வளைந்து, நெளிந்து நின்ற மராமரங்களை (பலா மரங்கள்) மண்ணில் ஓர் இடத்தில் காலினால் ஸ்ரீ இராமபிரான் மிதித்து அழுத்த அந்த ஏழு மராமரங்களும் ஒரே வரிசையில் வந்து நின்றனவாம். அம்மரங்களைத் தன் ஒரே பாணத்தினால் ஒரே தடவையில் துளைத்துத் தன் வீரம் பற்றிய சுக்கிரீவனின் சந்தேகத்தைத் தீர்த்து வைத்ததும் நாம் அறிந்ததேயாகும்.

அடுத்து எடுத்த கிருஷ்ணாவதாரத்திலும் பகவானின் பாத வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறிடங்களில் காண்கின்றோம்.தன்னைக்கொல்லவே கிருஷ்ணன் பிறந்துள்ளதை அறிந்த கம்சன் அசுரர் பலரை ஏவிவிட்டு கிருஷ்ணனைக் கொல்ல முயன்றான். அந்த நோக்கில் வந்து வண்டிச் சில்லில் மறைந்து இருந்தான் சகடா சூரன். இதனை அறிந்த பாலகிருஷ்ணன் தன் திருப்பாதத்தினால் உதைத்தே அவனை வதைத்தார். உயிரிழந்த சகடாசுரன் பெரிய உருவத்துடன் கிடந்தான். அது கண்டு ஆயர்பாடியிலுள்ளோர் ஆச்சரியத்தில் நின்றனர்.

ஒரு சமயம் பாலகிருஷ்ணனின் தொல்லைகளைச் சகிக்க முடியாத யசோதை அவனை ஒரு பெரிய உரலுடன் கட்டிவைத்தாள். துடுக்குக் குணமுள்ள கிருஷ்ணன் அந்தப் பெரிய உரலை இழுத்தபடியே தவழ்ந்து, தவழ்ந்து சென்று வீட்டின் முற்றத்தின் கோடியில் நின்ற இரட்டை மருத மரங்களின் நடுவாகச் சென்று கயிற்றை அறுத்து விடுதலை பெறமுயன்றான். உரல் கட்டிய கயிறு அறுப்பதற்காக காலை உதைத்து நின்றவாறு பலமாக இழுத்தான். கிருஷ்ணன். ஆனால் கயிறு அறுந்து போகாமல் இரண்டு மருத மரங்களும் பேரிரைச்சலுடன் கீழே சாய்ந்து விழுந்தன. நல்ல வேளையாகக் கிருஷ்ணனுக்கு ஏதும் நிகழ்ந்தில்லை.

வடதிசை வேந்தன் குபேரனின் மைந்தர் இருவர் அர்ஜுனனும் யமலனும் இவர்கள் இருவரும் நாரதர் வந்ததையும் உணராது பெண்களுடன் சல்லாபித்துக் கொண்டிருந்தனர். இதனால் நாரதர்"நீவிர் இருவரும் மரங்களாவீர்கள்" எனச் சாபம் கொடுத்துச் சென்றார். அப்படி (மருத) மரமாக நின்றவர்கள்தான் கிருஷ்ண பகவானின் திருப்பாதங்கள் பட்டு சாபவிமோசனம் பெற்றவர்.

யமுனா நதி அருகே ஒரு பெரிய மடு இருந்தது. அதில் சில நாட்களாக காளிங்கன் எனும் பெரும் நாகம் ஒன்று வந்து கிடந்தது. அதுதன் கொடிய நஞ்சினை உமிழ்ந்து பசுக்களும், மக்களும், நீரைப் பருகமுடியாமல் செய்தது. குளத்தினுள் இறங்குவோரையும் கடித்துக்கொன்றது. இஃது அறிந்து கிருஷ்ணன் அவ்விடம் சென்று அந்தக் குளத்தருகில் கிடந்த நாகத்தின் மேல் குதித்துக் தன்கால்களால் மிதித்துக் துவைத்து தண்டை ஒலி கலீர், கலீர் என ஒலிக்க ஆனந்த நடனமாடி காளிங்கனை வருத்தினார். அவருக்கு அது ஆனந்த மூட்டும் விளையாட்டாக இருந்தது. பார்த்துக்கொண்டிருந்துத ஆயர்களுக்கும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இறுதியில் காளிங்கனின் செருக்கை அடக்கி அதனை தூரத்தே உள்ள கடலுக்குச் செல்லுமாறு மன்னித்து தப்பியோடிப் போகச் செய்தார். காளிங்கநர்த்தனம் என்று இந்த சம்பவத்தை மக்கள் பெரிதும் போற்றுவாராயினர்.

ஒருநாள் களைப்பினால் நந்தகோபர் அம்பிகாவனத்தில் படுத்துக்கிடந்தார். அங்கு வந்த மலைப் பாம்பொன்று நந்தகோபரை விழுங்கத் தொடங்கியது. இதைக் கண்ட கிருஷ்ணர் தன் திருப்பாதங்களால் அப்பாம்பை மிதித்தார். என்ன ஆச்சரியம் அப்பாம்பு ஓர் அழகிய மனித உருவம் பெற்றெழுந்து கிருஷ்ணரை வணங்கி நின்றது. இப்படி தெய்வலோக வாசியான ஒரு வித்தியாதரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப விமோசனம் பெற்றார்.

கம்சனால் மதுரைக்கு அழைக்கப்பட்ட கிருஷ்ணர்; வீதியில் போய்க் கொண்டிருந்த சமயம் ஒரு கூன் (வடிவப்) பெண் சந்தனக் குழம்பு கொண்டு சென்றாள். அது கமகம என நறுமணம் கமழ்ந்தது. அதனை விரும்பிய கிருஷ்ணன் தனக்குப் பூசிக் கொள்ள சந்தனம் கேட்டான்.

"ஐயா, என் பெயர் திரிவக்ரா நான் சந்தனக் குழம்பு சேர்ப்பதில் கெட்டிக்காரி. கம்சன் என்னிடந்தான் சந்தனச்சாந்து பெற்றுக் கொள்வார். நான் தங்களுக்குத் தருகின்றேன்.''எனக் கூறிச் சந்தனக் கிண்ணத்தைக் கிருஷ்ணனின் முன் நீட்டிப் பிடித்தாள். அவர் மகிழ்வுடன் சந்தனச் சாந்தை உடலெங்கும் பூசி மகிழ்ந்தார். பின்னர் அந்தக் கூன் பெண்ணுக்கு நன்மை செய்ய விரும்பியத் தன்னிரு பாதங்களாலும் அவளின் பாதங்களை அழுத்திமிதித்தபடி இரண்டு விரல்களாத் தாடையின் கீழ்ப்பிடித்து மேலே தலையை உயர்த்தினார். என்ன ஆச்சரியம் அவளது முதுகுக் கூன் நிமிர்ந்து விட்டது. அவள் முன்னைவிட அழகு பெற்று நின்றாள். கண்ணீர் பெருக அவள் பாதங்களில் விழுந்து வணங்கி விட்டுப்போனாள்.

இந்திரப் பிரஸ்தத்தில் இருந்தனர் பாண்டவர்கள். தருமர் இராஜசூயயாகம் செய்தார். யாகத்தின் முடிவில் சுக்கிர பூசை செய்வது வழக்கம். அதாவது யாகத்தில் கலந்து கொண்டவர்களில் கௌரவமான பெரியோர்களை பூசை செய்து வழிபடுவது வழக்கம். தருமர் கிருஷ்ணனை சுக்கிர பூசை செய்து அவர் பாதங்களை வணங்கினார். இதனால் அவர் தருமருக்குப் பல நன்மைகள் செய்தார்.

மதிலையில் கிருஷ்ணன் மீது பக்தி மிகக்கொண்ட சுருததேவர், பகுலாச்வன் எனும் இருவர் இருந்தனர். முன்னவர் ஏழை அந்தணர். அடுத்தவர் மிதிலை நாட்டரசன். இருவரும் ஒரு சமயம் கிருஷ்ணனைப் பாதம் பணிந்து தமதில்லம் வந்து சில நாட்கள் இருக்க வேண்டுமென ஏக காலத்தில் வேண்டினார்கள். இருவரதும் பக்தியை மெச்சிய பெருமான் ஏக காலத்தில் இரு வடிவம் எடுத்து அவர்களை மகிழ்வித்து சிறிது காலம் அவர்களது வீட்டிலும் அரண்மனையிலும் வாழ்ந்திருந்தார்.

இது எதனைக் காட்டுவது எனின், பக்தர்கள் யாராய் இருந்தாலும் தன்னைப் பாதம் பணிந்து வணங்கினால் கிருஷ்ணன் அவர்களின் வேண்டுதலுக்கும், விருப்புக்கும் கட்டுப்பட்டு அருள்புரிவான் என்பதாகும்.

நாமும் நாள்தோறும் அவன் பாதக் கமலங்களை நினைத்துத் தியானித்து நல்லருள் பெறுவோமாக.

**திரு. வீ. பெ. சோமசுந்தரம்**
**ஆலோசகர் ~ சரீரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்வம் கொள்ளாதே! (ஆன்மீகச் சிறுகதை)

அர்ஜுனன் தீர்த்த யாத்திரையை மேற்கொண்டு தென்னிந்தியா வந்தபோது ராமசேதுவை அடைந்து, இலங்கைக்கு ராமர் செல்ல கற்களால் அடுக்கி கட்டப்பட்டிருந்த பாலத்தைப் பார்த்தான். அப்போது ஒரு சிறு குரங்கு அங்கே நடமாடிக் கொண்டிருந்தது. அதைப்பார்த்து அர்ஜுனன் சிரித்தான். "ஏன் சிரிக்கிறாய் வீரனே? என்று அந்தக் குரங்கு கேட்டது.

"ஸ்ரீ ராமன் சிறந்த வில்வீரன். அவன் ஏன் இலங்கைக்குக் கடலைக் கடந்து செல்ல அம்புகளால் ஒரு பாலம் கட்டியிருக்கலாமே. போயும் போயும் உன்னைப் போன்ற குரங்குகளைத் துணைகொண்டா, இப்படி ஒரு கருங்கற் பாலம் கட்டுவது? என்று மிகுந்த கர்வத்துடன் கேட்டான் அர்ஜுனன்.

"அம்புகளால் பாலம் கட்ட முடியுமா? "என்று வியப்புடன் கேட்டது அந்தச் சிறு குரங்கு.

" ஏன் முடியாது நானே வேண்டுமானால் அம்புகளைத் தொடுத்து இங்கே ஒரு பாலம் கட்டிக்காண்பிக்க முடியும்" என்று சவால் விடுத்தான் அர்ஜுனன்.

"பாலம் கட்டலாம். ஆனால் அதில் என்னைப் போன்ற குரங்குகள் ஏறிநடந்தால் பாலம் தாங்குமா? இடிந்து விழுந்துவிட்டால் என்ன செய்வது? அதனால்தான் என்னவோ இராமர் என்னைப் போன்ற குரங்குகளின் உதவியுடன் இக்கருங்கற் பாலத்தைக் கட்டி இருக்கிறார்" என்றது குரங்கு.

"ஏ! குரங்கே! என்னிடமா இந்தக் கேள்வியைக் கேட்கிறாய்? இதோபார் என்னுடைய சாதனையை! இப்போதே அம்புகளைத் தொடுத்து ஒரு பாலம் அமைத்துக் காட்டுகின்றேன். நீ அதன் மேல் ஏறி நட! பாலத்திற்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால், நான் தீமூட்டி அதில் குதித்து உயிர்த்தியாகம் செய்து கொள்வேன்." என்று கோபத்துடன் உரைத்தான் அர்ஜுனன்.

உடனே அந்தச் சிறுகுரங்கு பெரிய உருவம் எடுத்தது.கையில் கதை ஏந்தி அர்ஜுனன் முன் வாயுபுத்ரன் அனுமானாக நின்றது.

" பார்த்தா! என்னுடைய தலைவன் ராமனையா இழித்துப் பேசினாய்? உன்னால் ஆனதைப் பார்! வலுவுள்ள அம்புப்பாலம்கட்டு. நான் அதில் ஏறி பொடிப்பொடியாக்கிக் காட்டுகின்றேன்" என்றான் அனுமான்.

மறுகணமே அர்ஜுனன் தனது காண்டீபத்தை எடுத்து நாணேற்றினான். சரமாரியாக அம்புகளைப் பொழிந்தான. அவை ஒன்றோடொன்று கோர்த்துக் கொண்டு பாலமாக அமைந்தன. பீஷ்மருக்கு அம்புப் படுக்கை அமைத்த காண்டீபன் பெருமிதம் ததும்பும் முகத்துடன் கம்பீரமாக நின்றான். ஆனால் அந்தப் பெருமைகள் சில நிமிடங்களே நிலைத்தது. அனுமன் உயரக் கிளம்பி வானத்தில் பறந்து அங்கிருந்து நேரே கீழே பாலத்தின் மீது குதித்தான். பாலம் நொறுங்கியது.

அர்ஜுனனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தபடி "என்ன அர்ஜுனா என்ன செய்யப் போகிறாய் இப்போது? சவால் விட்டபடி உயிர்த் தியாகம் செய்யத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரா? என்று அனுமான் கேட்டான். அர்ஜுனன் தலை குனிந்து வெட்கித்தான் தீயை மூட்டச்சொன்னான். அதில் குதித்து உயிரை விட அக்கினியை மும்முறை வலம் வந்தான். அப்போது பச்சைமா மலைபோல் மேனி கொண்டு சகலரையும் காக்கும் வண்ணக் கண்ணன் அவ்விடம் தோன்றினார்.

"என்ன அர்ஜுனா! என்ன நடந்தது? என்று ஒன்றுமே அறியாதவரைப் போல் கேட்டார். அர்ஜுனன் சொல்லத் தொடங்குமுன் அனுமான் எல்லாவற்றையும் சொல்லி வணங்கினான். மேலும் "அர்ஜுனன் உயிரை விட்டே ஆக வேண்டும்! என்றான்.

"நல்லது. இந்தச் சவால் விட்டதற்கும் நடந்து முடிந்ததற்கும் யார் சாட்சி? பெரியவர் ஒருவரை வைத்துக் கொண்டு அல்லவா இந்தப் போட்டியைத் தொடங்கி இருக்க வேண்டும்?. என்று கேட்டார் கிருஷ்ணர்.

அனுமன் மிகுந்த பெருமையுடன் "இப்போது மீண்டும் செய்து பார்த்தால் போச்சு! என்னால் அந்த 'அம்புப் பாலத்தை நொறுக்க முடியாதா என்ன?" என்றான்.

கிருஷ்ணர் சிரித்துக்கொண்டே அர்ஜுனனை மீண்டும் அம்புப்பாலம் அமைக்கச் சொன்னார். பாலம் அமைக்கப்பட்டது. அனுமான் தனது பலம் கொண்ட வரையில் ஏறி மிதித்து நடந்தான். பாலம் அசைந்து கொடுக்கவில்லை. அனுமான் தலை குனிந்தான்.

அர்ஜுனன் நன்றியுடன் நிமிர்ந்து பார்த்தான்.கிருஷ்ணரின் தோள்களிலும் முதுகிலும் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

"என்ன சுவாமி! என்ன நடந்தது? என்று பதறினான் அர்ஜுனன்.

"உன் அம்புப் பாலத்தை நான் தான் முட்டுக் கொடுத்து தோளால் தாங்கினேன். அனுமான் குதித்தபோது என்மீது ஏற்பட்ட காயங்கள் இவை. பின்னே உன்னுடைய அம்புகளின் பலத்தினாலா பாலம் உடையாது நின்றதென்று எண்ணினாய்" என்று கேட்டார்.

முதலில் அர்ஜுனன் - பின்னர் அனுமான் இருவருக்குமே கர்வ பங்கம் ஆயிற்று! எவ்வளவு பெரியவர் ஆனாலும் கர்வம கொள்ளக்கூடாது

தவிர கிருஷ்ணனைச் சரணபுகுந்து நம்பிக்கையுடன் வணங்கினால் எத்தகைய துன்பத்திலும் எம்மைக் காப்பான் - "பக்தனைக் காக்கும் பரந்தாமன்" என்பதும் புலனாகிறது.

**பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா**
**அருளிய உபதேசக் கதை.**

**தொகுப்பு: ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவை நோன்பும் பரந்தாமன் பேரருளும்

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்றும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

அரங்கத்து அண்ணலாம் கண்ணன் கழலினை நண்ணுக மனமே எனும் உயரிய சிந்தனைக்கு ஒப்ப மாயவனாகிய கண்ணனை ஆயர் குலத்து அன்பனை எண்ணுவதும் அன்னவன் தாள் நண்ணுவதும் நல்லார் கடன். மாதங்களில் எத்தனையோ மாதங்கள் தனிச்சிறப்புடையது. எந்த மாதத்தை ஆகினும் இறைவன் தன் சொந்த மாதம் என்று கூறியதில்லை. ஆனால் மாதங்களிலே கடைசி மாதத்தை மாத்திரம் சொந்த மாதம் என்கின்றானே ஒரு இறைவன். அவன் மாதங்களிலே தான் மார்கழி என்கின்றான். தையிலே தொடங்கி கார்த்திகை ஈறாக பதினொரு மாதங்களும் பட்ட துன்பங்கள் துயரங்கள் கழியும் மாதம் மார்கழிமாதம். கடும் குளிர் கொட்டிய மழையின் வேகம் எங்கும் நீர் கசிந்த நிலை, காலை எழுந்து குளிர்ந்த நீரில் குளிப்பதென்றால் உடல் சிலிர்த்து நிற்கும். இந்தவேளையிலா குளிப்பது என்று சுகமாகத் தூங்குகின்ற வேளையில் இறைவனை நினைப்பதா என்று தானே நம் மனம் எண்ணும் அந்த எண்ணத்துக்கு இதம் ஏற்படுத்தவே இறைவனாகிய கண்ணன் கூறுகின்றான்.''மார்கழி எனக்குரியதல்லவா அக்காலைப் பொழுது எழுந்து குளிர் நீரில் நீராடி கோபாலன் கோயில் எய்தி, அவன் கழலை ஏற்றுமின்'' என்றே இங்கு ஒருத்தி எழுப்புகின்றாள். ஒரு பெண்மையின் சத்திய நாதம் ஒரு தெய்வீகக் குரலாக ஒலிக்கின்றது.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிளையீர்
சீர் மல்கும் ஆய்பாடி செல்வச் சிறுமீகாள்

என்று கோதை நாச்சியாராம் ஆண்டாள் அறைகூவல் செய்கின்றாள் மார்கழி மாதம் முப்பது நாளும் பாவை நோன்பு. இது மார்கழிக்கும் இளம் மகளிருக்கும் உள்ள சிறப்பும், தெய்வீகத்தன்மை வாய்ந்தனும் இறைவனுக்கே மெய்த் தொண்டு செய்யும் இனியவனும் ஆகிய ஓர் ஆண்மகனை கணவனாக அடைய வேண்டுமென்ற ஆசை உள்ளத்தே ஊற்றெடுக்க தெய்வ மகனையே கணவனாக அடைய வேண்டுமென்ற திருவருள் நிறைவேற வேண்டுமென்ற இறைசித்தத்தில் தன்னை லயப்படுத்தி நோன்பு நோக்கின்றார்கள் இமைகளில் அதிகாலைப் பொழுதில் தன்னோடொத்த இளமகளிர்களைத் துயில் எழுப்பி ஆற்றங்கரைக்குச் சென்று அகமகிழ்ந்து நீராடி மணலால் பாவை செய்து ஒரு பொழுது உணவருந்தி நெய் உண்ணாமல், பால் உண்ணாமல் கண்ணுக்கு மைதீட்டாமல் கூந்தலுக்கு மலர் சூட்டாமல் தேவையில்லாத காரியங்களைச் செய்யாமல் குற்றம் குறைகூறாமல் நோன்பு எனும் நுட்பம் பொருந்திய விரதத்தை அனுஷ்டிக்கிறார்கள். கண்ணன் மேல் கொண்ட காதல் அவனையே இதயத்தில் நாயகனாகக் காண்கின்றார்கள். உடல் அழிகின்ற பொருள் ஆத்மா அழியாதது. அழியாத பொருளை அழியாத ஒன்றுக்கே அர்ப்பணம் செய்வர். ஆத்மாவைக் காதலி ஆக்கி ஆண்டவனை காதலனாகக் கண்ட உயரிய நோன்பல்லவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நோன்பு. கோதை நாச்சியார் மீண்டும் ஒலிக்கின்றார்.

வையகத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிகைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதாம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்

ஆண்டாளின் இக்குரல் பாவை நோன்பின் பக்குவத்தைக் காட்டுகின்றது. மார்கழி நோன்பின் மகத்துவம் சைவ சமயத்தவர்க்கும் வைணவ சமயத்தவர்க்கும் உரிய மாதம் சைவ சமயத்தவர்கள் சிவப்பரம் பொருளாகிய சிவபெருமானை முழுமுதலாகக் கொண்டு மாணிக்கவாசகர் அருளிய மணிவாசகமாம் திருவாசகத திலுள்ள திருவெம்பாவையைப் பாடி பாவை நோன்பைக் கடைப்பிடித்து ஆதிரையான் எனும் சிவனை நினைந்து பத்து நாள் பாவை பாடி திருவாதிரைத் தீர்த்தமாடி சித்தம் களிகொள்வர். அஃதினைப்போல் வைணவரும் ஆண்டாள் பாடிய திருப்பாவையைப் பாடி வைகுந்த ஏகாதசி அன்று பாவை நோன்பைப் பூர்த்தி செய்வர். இரண்டு சமயங்கள் காட்டிய சமய ஒற்றுமை சமூக ஒற்றுமை இதன் கண்விளங்கும். பாவைநோன்பு என்பது மிக முக்கியமானவை . ஆண்களின முகம் காணாமல் அதிகாலையில் எழுந்து நீராடி ஏதும் அருந்தாமல் திருமாலாம் விஷ்ணு பகவானை நினைத்து மதியம் மட்டுமே ருசியில்லாமல் சமைத்த உணவை சிறிது உண்டு பகல் துகிலாமல் வேறு சிந்தனைகளில் மனத்தைச் செலுத்தாமல் அவனருளால் அவனையே நினைத்தல் சிறப்புடையதாகும். மார்கழி முப்பது நாளும் விரதத்தை நோக்க முடியாதவர்கள் திருப்பாவை பாடும் நாட்களில் விரதத்தை அனுஷ்டித்து வைகுந்த ஏதாதசியில் நிறைவு பெறல் வேண்டும்.

கிருஷ்ண பரமாத்மா மிகச் சக்தி வாய்ந்த ஒரு தெய்வம். அன்னை பராசக்தியின் அருள் வடிவமே இக்கண்ணபிரான்தான். கண்ணன் குழந்தையாக தாயாகத் தந்தையாக தோழனாகச் சேவகனாக கதலனாக காதலியாக மகா கவி சுப்பிரமணிய பாரதி பார்க்கின்றார்.

காக்கைச் சிறகினிலோர் நந்தலாலா நின் கரிய
நிறம் தோன்றுதையா நந்தலாலா.

என்ற இப்பாடல் ஒரு கவிஞனின் உயிர்த்துடிப்பினை எடுத்துக்காட்டுகின்றது. ஆழ்வார்கள் கண்ணனின் அருள் வடிவிலே மூழ்கி நாலாயிரம் பாடல்களை வாடாத நறுமலர்களாக சூடி மகிழ்ந்தனர். இன்னும் எத்தனையோ பாடல்கள் கண்ணன் மேல் பாடினர்; பாடி ஆடினர். சிவப்பரம் பொருளின் அருட்சக்தியாக விளங்கும் அன்னை பராசக்தியின் திருவருள் நிறைந்த சக்தி வடிவமே.இச்சக்தி வடிவாகிய திருமால் காக்கும் கடவுளாகக் காட்சி தருகின்றான். அழித்தலை விட காப்பதல்லவா அருள் நோக்கு. இத்தகைய காத்தற் கடவுளை பாரதத்தில் கண்ணனாக இராமாயணத்தில் இராமனாக பத்து அவதாரங்களில் நரசிம்மனாக பரந்தாமனாக, பரசுராமனாக, பலராமனாக, வாமனனாக, மச்சமாக, கூர்மமாக, வராகமாக, புத்தனாக, கல்கியாக கண்டு பணிந்தனர். அந்த ஸ்ரீமன் நாராயணனாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணுவிற்கு செல்வத்துக்கு அரசியாகிய மகாலசஷசுமியை சக்தியாக்கி வழிபட்டனர். காப்பவனுக்கு அல்லவா பொருள் தேவை. அக்காக்கின்றவனுக்குத தானே பொருளுக்கு அதிபதியாகிய விஷ்ணுவை இணைத்தனர். இதன்சூக்சுமம் பெரிய தத்துவமே.கீதையிலே மனித சமூதாயத்துக்கு வழிகாட்டுகின்றான் கண்ணன். துணிவில்லா பார்த்தனாகிய அர்ச்சுனனுக்கு துணிவையே துணையாக்கி கடமையைச் செய் பலனை எதிர்பாராதே எனும் தாரகமந்திரத்தை சத்தியமாக்கு கின்றான். ஜாதி பேதம், குல பேதம், இனபேதம், மண்பேதம் இல்லாமல் மழை பொழிவது போல கண்ணன் அருள் மழையாகப் பொழிகின்றது. அதே கோதை நாச்சியார் மீண்டும் ஓரிடத்தில்

ஆழிமழைக்கண்ணா ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தெறி
ஊழிமுதல்வ னுருவம்போல் மெய்கறுத்துப்
பாழியம் தோளுடையப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழேதே சாரங்கமுதைத்த சரமழைபோல்
வாழ உலகிலே பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்

மழையும் இறைவனையும் ஒன்று படுத்திப் பார்ப்பது தத்துவமரபு. அந்த வகையில் கோதை நாச்சியார் ஆழி மழைக்கண்ணா! என விழித்து அறைகூவல் செய்கின்றாள். திருப்பாவையின்முப்பது பாடல்களும் கண்ணனின் கருணையையும் கன்னியரின் மகிமையும் பாவை நோன்பின் சிறப்பையும் பக்குவமாக எடுத்துக் காட்டுகின்றது. முப்பதாவது கடைசிப்பாட்டில்

வங்கக் கடல் கடைந்த மாதவனைத்
திங்கள் திருமுகத்துக் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறை கொண்டாவாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தன்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப்பரி சுரைப்பார் ஈரிண்டு மால்வரைர்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்றுஇன்புறுவ ரெம்பாவாய்.

இப்பாட்டின் நிறைவு இதயத்தில் நிறைவு கொள்கின்றது. "செங்கண் திருமுகத்து செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவரெம்பாவாய்" என்ற ஈற்றடி கண்ணனின் கருணையால் உலகம் இன்புறுகின்றது என்பதை கோதை நாச்சியார் ஆகிய ஆண்டாள் தெய்வத் தமிழால் தெளிவுறக் காட்டுகின்றார். பாவையர்கள் வைந்துளவ மாலையணி பரந்தாமன் பொற்கழலின் பெரும் புகழை பைந்தமிழால் பாடி இன்புறுவோம் ; இனிமை கொள்வோம். இன்னவன் தாள் நண்ணுவோம். நலமாக வாழ்வோம்.

அருட்கவியரசு கண்மணிதாசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஆஞ்சநேயர் போற்றி - 108

ஓம் அஞ்சனாதேவி பெற்ற அனுமனே போற்றி
ஓம் ஆஞ்சநேயனே எங்கள் அருமையேபோற்றி
ஓம் இன்னலைத் தீர்க்க வந்த இறைவனே போற்றி
ஓம் ஈடிலா வீர தீர இளமையே போற்றி
ஓம் உன்னத வாலை உச்சி உகந்தவா போற்றி
ஓம் ஊறிலா வண்ணம் காக்கும் உத்தமா போற்றி
ஓம் எண்ணரும் கலைகள் வல்லாய் எளிமையே போற்றி
ஓம் ஏற்றமே அருளும் செல்வமாருதி போற்றி
ஓம் ஐந்தெனும் புலனை வென்ற ஆண்டவா போற்றி
ஓம் ஒண்ணிதி வழங்க வல்ல உயர்குணமே போற்றி
ஓம் ஓங்காரம் செய்து துள்ளும் உரிமையே போற்றி
ஓம் ஔடதம் தேடிச் சேர்த்த அதிசயம் போற்றி
ஓம் கண்ணுதல் கருதும் செல்வ கண்மணி போற்றி
ஓம் காற்றிறை அருளால் வந்த கடமையே போற்றி
ஓம் கிண்கிணி தண்டை கொண்ட கிளர்ச்சியே போற்றி
ஓம் கீசகன் பகையின் அண்ணன் அனுமனே போற்றி
ஓம் குரங்கினத் தலைமைகொள் துணைவா போற்றி
ஓம் கூரிய சொல்லின் செல்வ சுந்தர போற்றி
ஓம் கெடுதியை களையும் எங்கள்இறைவனே போற்றி
ஓம் கேடுகள் நீக்கும் ஆஞ்ச நேயனே போற்றி
ஓம் கைவரு ராமபக்த அனுமனே போற்றி
ஓம் கொடுமையை நீக்க வந்தகுமுதமே போற்றி
ஓம் கோடிசூ ரியப்பிரபை கொண்ட இறைவா போற்றி
ஓம் கௌவையைக் களையும் செல்வ மாருதி போற்றி
ஓம் சங்கடம் நீக்க எண்ணும் சத்தியம் போற்றி
ஓம் சாத்திரம் எல்லாம் கற்ற சற்குண போற்றி
ஓம் சிந்தனை சிறந்த செல்வ அனுமனே போற்றி
ஓம் சீரிய ஞான தீப மாருதி போற்றி
ஓம் சுந்தர முகம் கொள் ஞான சூக்குமம் போற்றி
ஓம் சூரியன் மாணியான சுடரொளி போற்றி
ஓம் செந்தமிழ் கம்பன் போற்றும் கீர்த்தியே போற்றி
ஓம் சேய்மையில் அண்மையாம் துணைவரே போற்றி
ஓம் சைலமே உறையும் எங்கள் சற்குணா போற்றி
ஓம் சொர்ணமே மேனியான சுந்தரா போற்றி
ஓம் சோகமே தீர்ப்பாய் எங்கள் அனுமனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சௌகரியம் சேர்ப்பாய் எங்கள் சஞ்சீவி போற்றி
ஓம் கடாயெனும் பெயர் கொண்ட கண்மணி போற்றி
ஓம் காட்டினில் மலையில் வாழும் கற்பகம் போற்றி
ஓம் கிளிபயில் சோலை எல்லாம் திரிகுவை போற்றி
ஓம் கீண்டினை அசுரர் மாளக் கீர்த்தியே போற்றி
ஓம் குறைவறு கல்வி ஞானம்படைத்தனை போற்றி
ஓம் கூறுசொல் தன்னில் செல்வன் சுந்தரன் போற்றி
ஓம் கெடுதியைச் சாய்த்து நீக்கும் அனுமனே போற்றி
ஓம் கேடறியாத தூத இறைவனே போற்றி
ஓம் கைநகம் வஜ்ர மான கண்மணி போற்றி
ஓம் கொள்கையில் உறுதி வாய்ந்த மாருதி போற்றி
ஓம் கோட்டையைத் தாண்டும் செல்வ மாருதி போற்றி
ஓம் கௌபீன் இறைவன் போற்றும் கனகமே போற்றி
ஓம் தண்ணிழல் ஆன எங்கள் புண்ணியா போற்றி
ஓம் தாங்கரும் துயரம் தீர்க்கும் தருநிழல் போற்றி
ஓம் திண்ணிய உரம்கொள் தேகா மாருதி போற்றி
ஓம் தீமையை நீக்கும் செல்வ அனுமனே போற்றி
ஓம் துணிவினில் சிறந்து எங்கள் அனுமனே போற்றி
ஓம் தூய்மை வாய்மை வாய்ந்த மெய்மையே போற்றி
ஓம் தெளிவுறு கேள்வி ஞானம் கிளர்த்துவை போற்றி
ஓம் தேடியே சஞ்சீ விநல்கும் கீர்த்தியே போற்றி
ஓம் தையலாம் சீதை போற்றும் தூதனே போற்றி
ஓம் தொழில் நலம் வலிமை நல்கும் தூயவா போற்றி
ஓம் தோள்வலி மிக்க ராம தூதனே போற்றி
ஓம் தௌமியன் போற்றும் ஞான அனுமனே போற்றி
ஓம் நற்குண சீலரே மாருதி வீர போற்றி
ஓம் நாடிய தரவே வல்லாய் நாயக போற்றி
ஓம் நிச்சயம் பிரமச்சரியம் காத்தனை போற்றி
ஓம் நீடிய பகையை நீக்கும் நிறைகுணம் போற்றி
ஓம் நுண்மைகொள் அறிவு கொண்ட மாருதி போற்றி
ஓம் நூலறி புலவ ஞான பானுவே போற்றி
ஓம் நெற்றியில் நாமம் காட்டும் நெறியதே போற்றி
ஓம் நேர்ந்தனை ராமநாமம் தூதனே போற்றி
ஓம் நைந்திடும் நிலையை நீக்கும் நாயகா போற்றி
ஓம் நொந்திடா வண்ணம் காக்கும் நோக்கமே போற்றி
ஓம் நோயினை அண்டா வண்ணம் காக்கநீ போற்றி
ஓம் நௌவிபின் சென்ற இராம தூதனே போற்றி
ஓம் பலநலம் கொண்ட எங்கள்பரமனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பாலக வஜ்ர தேகா அனுமனே போற்றி
ஓம் பிலமதில் சென்று வெற்றி சேர்த்தனை போற்றி
ஓம் பீழைகள் நீக்கும் செல்வ மாருதி போற்றி
ஓம் புன்மைகள் தன்மை நீக்கும் புனிதமே போற்றி
ஓம் பூவுடைக் கானம் வாழும் பூரண போற்றி
ஓம் பெருமைகொள் உரமே பெற்ற பரமனே போற்றி
ஓம் பேசரு வியாகரணம் பிறவெலாம் கற்றாய் போற்றி
ஓம் பைம்பொழில் திரியும் அன்பே அனைத்துநீ போற்றி
ஓம் பொறுமைகொள் அறத்தின் தூத புண்ணியா போற்றி
ஓம் போயினை வென்றாய் நன்றாய் பூரண போற்றி
ஓம் பௌவமே தாவிப் பாயும் பரமனே போற்றி
ஓம் எக்குலத்தாரும் போற்றும் இறைவனே போற்றி
ஓம் எங்கணும் நீயே உள்ளாய் இறைவனே போற்றி
ஓம் அச்சரத்தால் வாலி அழிந்திடச் செய்தாய் போற்றி
ஓம் அஞ்சனை செல்வ அரிய செம்மணியே போற்றி
ஓம் திட்டமாய் செயல் செய்யும் தினகரன் தூத போற்றி
ஓம் திண்ணமாய் வெற்றி தரும் ஆஞ்சநேயனே போற்றி
ஓம் எத்திறம் தனிலும் வல்ல இனிய மாருதியே போற்றி
ஓம் எந்தையர் சிந்தை வாழும் இறைவமாருதியே போற்றி
ஓம் எம்மருங் கினிலும் வாழும் இறைவா போற்றி
ஓம் எப்பரம் பொருளும் வாழ்த்தும் இனியவா போற்றி
ஓம் எவ்வனம் செலினும் உய்வன சொல்வாய் போற்றி
ஓம் எய்திடும் இனிமை எல்லாம் இயற்றுவை போற்றி
ஓம் இல்லற ராம தூதன் எங்கள் மாருதியே போற்றி
ஓம் நள்ளிரா தன்னில் காக்கும் காலசஞ் சீவி போற்றி
ஓம் ஆழ்கடல் கடந்த வஜ்ர தேகனே இறைவா போற்றி
ஓம் பாற்கடல் பிறந்த மாது பரிவுறும் கடமை போற்றி
ஓம் மார்பினைப் பிளந்து மாயன் மகத்துவம் அளித்தாய் போற்றி
ஓம் பன்னலம் சேர்க்கும் எங்கள் பத்ம தேகனே போற்றி
ஓம் நன்னயம் சேர்க்கும் எங்கள் ராம தூதனே போற்றி
ஓம் பொன்னவிர் அஞ்சனை தந்த புதுமையே போற்றி
ஓம் நூற்கடல் கடந்த எங்கள் நுண்மையே போற்றி
ஓம் நாற்பயன் விளைக்கும் எங்கள் நாயகா போற்றி
ஓம் பாற்படு பொருளில் எல்லாம் படர்ந்தனை போற்றி
ஓம் போற்றியே அனும போற்றி பூரணா போற்றி! போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும், வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய் 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போ திப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோ மறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 3

ஒள்நித் திலநகையாய் இன்னமும் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப் பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம் மாட்டோம் நீயே வந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலரும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலமிடினு முணராய் உணராய் காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய் 5

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலவே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய் 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறே
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய் 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார்தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறைவு மிலோமேலோர் எம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங் கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் எதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய் 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்த்தோங்காண் ஆரழல்போற்
செய்யா, வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய் 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச் சிற்றப்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மனங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்க குடையும் புனல்பொங்கப்
பங்கயம் பூம்புனல்பாயந் தாடேலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழகொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோர் எம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்னே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங்களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தான்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்து டையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னிஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதத் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
தங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்களப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிக்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 18

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தான்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய் 19

போற்றி அருளகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய். 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாவை

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமியர்காள்!
கூர்வேல் கொடுத்தொழிலன் . நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். 1

வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்கு
செய்யும் கிரியைகள் கேளீரோ, பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். 2

ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகள
பூங்குவளைப் போதில். பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். 3

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழி யுள்புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழி போல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சாங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூயபெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்ததாமோதரனை
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால்பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். 5

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விழிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய் எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 6

கீசுகீசென்று எங்கும் ஆனைச்சாத்தான் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாச்சியர், மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?
தேசமுடையாய் ! திறவேலோ ரெம்பாவாய். 7

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னை
கூவுவான் வந்துநின்றோம் கோது குலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவா வென்றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாழ் திறவாய்
மாமீர்! அவளை யெழுப்பீரோ? உன்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மானாய்!
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டு ஒருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகர்ணனும்
தோற்றம் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்றல் அனந்த லுடையாய் அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். 10

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி! நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். 11

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்று பால்சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றி
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச்செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும் நீவாய் திறவாய்
இனித்தா னெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்!
அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய். 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனை
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைக ளெல்லாரும் பாலைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீநன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். 13

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெம்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயிலில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். 14

எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ!
சில்லென்றழையேன்மின்! நங்கைமீர்! போதருகின்றேன்
வல்லை உன் கட்டுரைகள் பண்டேஉன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீபோதாய் உனக்கென்ன வேறுடைமை
எல்லாரும் போந்தாரோ? போந்தார் போந்தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். 15

நாயகனாய் நின்ற நந்த கோபனுடைய
கோயில் காப்பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர்சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம்! துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேயநிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே
எம்பெருமாட்டி யசோதாய்! அறிவுறாய்
அம்பர மூடறுத் தோங்கி உலகளந்த
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். 17

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னாய்
கந்தம் கமழும் குழலீ கடைதிறவாய்!
வந்து எங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார்விரலி! உன் மைத்துனன் பேர்பாட
செந்தா மரைக்கையால் சீரார்வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 18

குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்சயத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய்! நீஉன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழவொட் டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாபால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய். 19

முப்பது மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்பமுடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலை செவ்வாய்! சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொழியும் தந்து உன்மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்றமுடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற் கண்
ஆற்றாதுவந்து உன்னடி பணியுமா போலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். 21

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய்வந்து நின்பள்ளிக்கட்டிற் கீழே
சங்கமிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிண்கிணி வாய்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ
திங்களும் ஆதித்தியனு மெழுந்தாற்போல்
அங்கணிரண் டுங்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாப மிழிந்தேலோ ரெம்பாவாய். 22

மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரியசிங்க மறிவுற்றுத் தீவிழித்து
வேரிமயிர் பொங்க எப்பாடும் போர்ந்துதறி
மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு
போதருமாபோலே நீபூவைப் பூவண்ணா உன்
கோயில்நின்று இங்ஙனே போந்தருளி கோப்புடைய
சீரியசிங் காசனத் திருந்து யாம்வந்த
காரிய மாராய்ந்த தருளேலோ ரெம்பாவாய். 23

அன்றிவ் வுலக மளந்தா யடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச்சகட முதைத்தாய் புகழ்போற்றி
கன்றுகுணிலா வெறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா வெடுத்தாய் குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில்வேல் போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான்
இன்று யாம் வந்தோ மிரங்கேலோ ரெம்பாவாய். 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனா யொழித்து வளர
தரிக்கிலனாகித் தான்தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 25

மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டிலையேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலினிலையா யருளேலோ ரெம்பாவாய். 26

கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா உன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போ மதன்பின்னே பாற்சோறு
மூடநெய்பெய்து முழங்கை வழிவார
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 27

கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்றன்னைப்
பிறவி பெருந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா உன்றன்னோடு
உறவேல் நமக்கு இங்கொழிக்க வொழியாது
அறியாத பிள்ளைகளோ மன்பினால் உன்றன்னைச்
சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே
இறைவா நீதாராய் பறையேலோ ரெம்பாவாய். 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர் புஜம்
பிரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே!!



*வெண்ணிற வஸ்திரத்தைத் தரித்தவரும், சர்வ வியாபகரும் சந்திரனைப் போன்ற சோபையுடையவரும், நான்கு புயங்களுடையவரும், அழகுடன் பிரகாசிக்கும் திருமுகத்தையுடையவரும், எல்லா இடையூறுகளையும் தவிர்ப்பவருமாகிய விநாயகரை நான் பிரார்த்திக்கின்றேன்.*

- காயத்ரி மந்திரம் -

ஓம் பூர்: புவ: ஸ்வ: தத்ஸவிதுர் வரேண்யம்
பர்க்கோ தேவஸ்ய தீமஹி: தீயோயோன பிரசோதயாத்:

எல்லாவற்றுக்கும் மேலான இறைவனே! நீ மட்டுமே உண்மைப் பொருள்.போற்றப்படுவதற்கும் ஆராதிப்பதற்கும் தகைமையுடையவனும் நீயே. எல்லாவற்றையும் படைப்பவனும் அவற்றுக்கு ஆதாரமாய் விளங்குபவனும் நீயே. பிராணனை அளிப்பவனும் நீயே. தெய்வீகத் தந்தையே! வாழ்வு, புத்தி, பேரின்பம் ஆகியவற்றின் மூலப்பொருளாக விளங்கும் நீ எல்லாம் வல்லவனாகவும், எல்லாம் அறிபவனாகவும், நித்திய வஸ்துவாகவும், அருளுடையவனாகவும் விளங்குகின்றாய். என் உணர்ச்சிகளை நீ அறிவாய். உன்னிடமிருந்து எதுவும் மறைந்திருப்பதில்லை. என் இதயமாகிய கோயிலில் உன்னைப் பிரதிஷ்டை செய்து வணங்க விரும்புகின்றேன். என்னுள்ளும் எல்லாவற்றினுள்ளும் உன் தெய்வீகம் பிரசன்னமாயிருப்பதை உணர விழைகின்றேன். நீ பெரியவனாகவும், நல்லவனாகவும், பரிசுத்தமானவனாகவும் விளங்குகின்றாய். தந்தையே! நான், நல்லதும், தூய்மையானதும், பாவம் அற்றதுமான வாழ்க்கை வாழ்வதற்கு உதவுமாறு வேண்டுகிறேன். என் அறிவுக்கு ஒளிதந்து அதை உத்வேகப்படுத்துவாயாக. என்றும் உனது தெய்வீக மகிமையின் சன்னிதியில் நான் ஜீவிக்கக் கூடியதாக எனக்கு மிகுதியான விளக்கத்தையும், நிம்மதியான மனத்தையும் அருள்வாயாக.

கிருஷ்ணார்ப்பணம்

ஆசிரியர்
**- வேஹாரான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்து உன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவவெங்களைக் கொல்லமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கு மேலேழ் பிறவிக்கும் உன்றன்னோடு
உறறோமே யாவோம் உனக்கே நாமாட்செய்வோம்
மற்றை நங்காமங்கள் மாற்றேலே ரெம்பாவாய். 29

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்டெரியல் பட்டபிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பா ரீரிரண்டு மமால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்றின்புறுவ ரெம்பாவாய். 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றத்தின் 2வது இலவச வெளியீடு

செலக்ஷன் ஓப்செற் அச்சகம் - அக்கரைப்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org